www.tamilarangam.net

Raya

# சஞ்சீவி

மலர்- 13

Chanchive 13. udgave





RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR-
-SEINE ; FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சஞ்சீவி

மலர்-13

அட்டைப்படம்: இவா. உதயகுமார்.
குழந்தையாய் மனிதன் இருந்து
விட்டால்...
குழப்பமும் மயக்கமும் உலகில்
இல்லை...

உள்ளடக்கம்:


பக்:

3. வளைகுடா யுத்தம்
8. கவிதை - கரவைதாஸன்
9. இலங்கையின் உள்நாட்டு யுத்தம்
13. கடிதங்கள்
21. சிறுகதை - மீரா
25. கவிதை - விமல்
26. பேட்டி - 'ஜோன் காப்போ'
27. டெனிஷ் அகதிகள் சங்கம்
34. Vi har brug for din hjælp.
35. குறுக்கெழுத்துப் போட்டி இல:12.
40. சிறுவர் அங்கம்
41. கவிதை - வளவன்
46. இடைவெளி - மீரா
50. Et besøg i Batticaloa.
51. கவிதை - பத்மா (சிறுவர் அங்கம்)
52. கவிதை - அக்கினிபுத்திரன்
54. Sus i skørterne
59. ஓவியம் (வளர்ந்துவரும் ஓவியர்)


விலை
10 Kroner


சஞ்சீவியின் தொடர்புகளுக்கு.

CHANCHIVE
POST BOX - 1205
7500 HOLSTEBRO.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# வளைகுடா யுத்தமும் அதன் பாதிப்பும்

இன்று குவைத் நாட்டினை விட்டு ஈராக் படைகள் வெளியேறியுள்ள இந்த கால கட்டத்தில் எங்களில் பலர் தீவிரமாக ஈராக்கிற்குச் சார்பாக விவாதிப்பதையும் இன்னொரு சாரார் அமெரிக்காவின் நடவடிக்கைகளை ஆதரித்துப் பேசி வதையும் காணக்கூடியதாகவுள்ளது. இன்றும் இவர் ஆரம்பத்தில் சதாம் ஹுசையினை ஆதரித்துப் பேசியும் இப்போது அமெரிக்காவினை ஈராக் வெல்ல முடியுமா என்று அமெரிக்காவினைசார்ந்து பேசியும் வருகின்றார்கள். நாங்கள் இப்படிப் பேசுவதற்கும் விவாதிப்பதற்கும் உலக வரலாற்று ரீதியான அரசியல் தெளிவின்மையே காரணமாகும்.

ஈராக் குவைத்தை விட்டு வெளியேறினாலும் இந்த 42 நாள் யுத்தத்தில் மத்திய கிழக்கு மக்களின் (ஈராக், குவைத், இஸ்ரேல், சவூதி) இழப்புக்கள் என்றும் அவர்களுடன் சேர்ந்தே வாழப் போகின்றது. இது இன்று எங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களைப் போன்றதே என்பதை நாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இந்த சந்தர்ப்பத்திலாவது வளைகுடா யுத்தத்திற்கான காரணிகளை சரியான முறையில்

www.tamilarangam.net



அறிந்து கொள்வதே பயனுள்ளதாகும்

## ஈராக்

17ம் நூற்றாண்டில் துருக்கி ஓட்டோமான் (OTTAMAN) பேரரசால் ஆக்கிரமிக்கப்பட்ட ஈராக் முதலாம் உலகப் போரின் பின் பிரிட்டிஷாரால் கைப்பற்றப் பட்டது. ஈராக்கில் வாழும் ஒரு குறிப்பிட்ட மக்கள் (15% மானோர்) குர்தீஸ் தான் மக்களாகும். ஈராக்கின் கிர்குக் பிரதேசத்தில் 1927ம் ஆண்டு எண்ணெய் கண்டு பிடிக்கப்பட்டது. 1932ம் ஆண்டு முதல் 1958ம் ஆண்டு வரை மன்னர் ஆட்சிக்குட்பட்டிருந்த ஈராக் 1958ல் ஒரு குடியரசு நாடாக மாறியது. 1974ல் அதிபர் அல்பக்கர் பதவி விலகிய தையடுத்து சதாம் உசைன் பதவிக்கு வந்தார். 1980ல் ஆரம்பித்த ஈரான் - ஈராக் யுத்தம் சுமார் ஒன்பது ஆண்டுகள் வரை நீடித்தது. இந்த யுத்தத்தால் இரண்டு நாடுகளுமே பெரிய அழிவுக் குள்ளாகியது. இப் போரிலே பல ஆயிரக் கணக்கான குர்தீஸ் இன மக்களை இரசாயணக் குண்டுகள் வீசி கொன்றதன் மூலம் ஈராக் அதிபர் சதாம் உசைனும் அவரது இராணுவப் படைகளும் தங்கள் கொடூரத் தனத்தையும் ஆக்கிரமிப்பு வெறியையும் வெளிக்காட்டியுள்ளார்கள். ஈரானோடு யுத்தத்தை மேற்கொள்வதன் மூலம் மத்திய கிழக்கிலே தான் ஒரு சக்தியாக மாற வேண்டும் என்பது ஈராக்கின் ஒரு குறிக் கோளாக இருந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஈராக்கின் வெளிநாட்டுக் கடன் 70 மில்லியனைத் தாண்டி விட்டது. தனது பொருளாதாரத்தைச் சீர்படுத்து வதற்கு ஈராக் தனது எண்ணெய் வருமானத்தினையே சார்ந்திருந்தது. 1989ல் நடந்த ஒபெக் நாடுகளின் பேச்சு வார்த்தையின் பின்பு சவுதி அரேபியா ஈராக்குடன் சமாதான ஒப்பந்தத்தினை ஏற்படுத்தி ஈராக்கின் விருப்பப்படி நாளொன்றுக்கு 19.5 மில்லியன் பீப்பாய் எண்ணெய் மட்டுமே உற்பத்தி செய்து கொண்டது. ஆனால் குவைத் வரம்பை மீறி வந்தது, ஈராக்கிற்கு பெரிய பாதிப்பினை ஏற்படுத்தியது. தனக்குப் பொருளாதாரப் பாதிப்பினை ஏற்படுத்தி வந்த குவைத்தினை தன்னோடு இணைத்துக் கொள்வதன் மூலம் பெரிய அளவில் (சவுதிக்கு அடுத்தபடியாக) எண்ணெய் உற்பத்தி நாடாக மாறி பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்வதே ஈராக் படையெடுப்பின் முக்கிய நோக்கமாகும். அத்துடன் குவைத்தை இணைத்துக் கொள்வதன் மூலம் பாரசீகக் குடாவிற்கான வழி நேரடியாகக் கிடைக்கிறது.

## குவைத்

ஆரம்பத்தில் கொரீன் (koreen) என்று அழைக்கப்பட்ட இந்தச் சிறிய வளைகுடா நாடு 18ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் குவைத் என்று பெயர் சூட்டப்பட்டது. 19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் துருக்கிப் பேரரசின்

www.tamilarangam.net



ஒரு பகுதியாக குவைத் இணைத்துக்
கொள்ளப்படலாம் என்ற அச்சத்
தில் இங்கிலாந்து வழங்கிய பாதுகாப்
பை ஏற்றுக் கொண்டதால் குவைத்
பிரிட்டிஷ் முடியாட்சியின் ஆளுகைக்கு
ட்பட்டது. 1938ம் ஆண்டு குவைத்தில்
எண்ணெய் வயல்கள் கண்டுபிடிக்
கப்பட்டு அமெரிக்கா பிரிட்டிஷ் மூலதன
த்துக்குச் சொந்தமான எண்ணெய்
கம்பனி நிறுவப்பட்டது. 1961ல் குவைத்
சுதந்திரம் பெற்றது. 1963ல் குவைத்
ஐ. நா. சபை உறுப்பினராயிற்று.
1974ல் குவைத் எண்ணெய் கம்பெனி
யின் சொத்துக்களில் 60% நாட்டுடை
மையாக்கப்பட்டது. 1975ல் குவைத்
அரசு அக்கம்பனி முழுவதையும் தனது
உடமையாக்கியது. குவைத்தில் 60%
இற்கு அதிகமானவர்கள் வெளிநா
ட்டவரே. ஆனால் வெளிநாட்டவருக்
கும் குவைத் நாட்டுப் பெண்களுக்
கும் அங்கு வாக்குரிமை வழங்கப்
படவில்லை. எகிப்து, இஸ்ரேல், அமெரி
க்கா, ஆகிய நாடுகள் அமெரிக்கா
வில் செய்து கொண்ட டேவிட் முகா
ம் ஒப்பந்தத்தை குவைத் கடுமையாக
எதிர்த்துள்ளது. பாலஸ்தீனியர்களின்
உரிமையை ஆதரித்துள்ளது. ஈ.ரான்
- ஈ.ராக் போரிலே பல வழிகளில்
ஈ.ராக்கிற்கே உதவி செய்து வந்து
ள்ளது. போரில் ஈ.ராக் ஈ.ரானிடம்
பாவோ குடாநாட்டினை இழந்ததன்
மூலம் வளை குடாவுக்கான வழி
அடைக்கப்பட்ட போது குவைத் தனது
துறைமுகத்தினை வழங்கி உதவி

www.tamilarangam.net



செய்தது. அத்துடன் பல மில்லியன் டாலர்களை ஈ.ராக்கிற்கு கடனாக வழங்கியுள்ளது. உலகின் செல்வ நாடுகள் பட்டியலில் 17 வது இடத்தினை வகிக்கிறது.

## அமெரிக்காவும் அதன் ஆதிக்கமும்

19ம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் இருந்தே வியட்னாம் பிரான்சின் காலனியாக இருந்தது. "ஹோசிமின்" தலைமையிலான பொதுவுடமைக் கட்சி வியட்னாமின் வட பகுதியினை பிரான்ஸ் ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுவித்தது. இந்த எதிர்த்தாக்குதலையும் இராணுவ இழப்புக்களையும் எதிர்கொள்ள முடியாமல் 4 தசாப்தங்களாக பிரான்ஸ் காலனித்துவ ஆட்சியினை (தென் வியட்னாமினை) அமெரிக்காவிடம் கைமாற்றிக் கொண்டது. இதைத் தொடர்ந்து அமெரிக்கா தனது பாரிய இராணுவத் தாக்குதலை வட வியட்னாம் மீது நடாத்தியது. நச்சு வாயுக்களை வீசி பெரியளவில் மக்கள் அழிவினையும் வளம் கொண்ட காடுகள் மீது எரிகுண்டுகளை வீசி இயற்கை வளத்தினையும் சீர்குலைத்தது.

1975 ம் ஆண்டு வியட்னாம் மக்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினை வியட்னாமில் இருந்து வெளியேற்றினர். (1964 – 1975) வரையில் இடைப்பட்ட 11 வருட காலத்தில் அமெரிக்க தரப்பில் பெருந்தொகையான

(தொடர்ச்சி பக்: 47)

www.tamilarangam.net



# மௌனங்கள் சம்மதமல்ல.

இலையுதிர் காலங்களில்
இலைகளை உதிர்த்துவிட்டு
மௌனமாக நின்ற மரங்கள்.
வசந்தம்! வந்ததும்,
முகைகளினூடே
பேதம் காட்டத்
தொடங்கிவிட்டன.

ஆம்,

உங்கள் மௌனங்கள்
என்றும் சம்மதமல்ல.
அமைதிக்கு வெள்ளையென்றும்,
மகிழ்ச்சிக்கு நீலமென்றும்,
புரட்சிக்கு சிவப்பென்றும்
உங்களில் எத்தனை
பேதங்கள்?

ஆம்,

வசந்தம் வராதிருந்தால்
உங்கள் மௌனங்கள்
சம்மதமாகவே இருந்திருக்கும்.

—: கரவை தாசன் :—

www.tamilarangam.net



# இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தால் பாதிக்கப் பட்ட வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களின் உதவிக்கான நிதி திரட்டுதல்...

(சென்ற (௨௫) மலரில் வெளியான டெனிஸ் ஆக்கத்தின் தமிழாக்கம்)

டென்மார்க்கிலுள்ள பல தமிழ்-டெனிஸ் நட்புறவுச் சங்கங்கள் ஒன்றிணைந்து இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தால் கூடுதலாகப் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு உதவிகள் நல்க முன்வந்து, ஓர் உதவி நிதிச் சேர்ப்பினை ஆரம்பித்துள்ளது. இந்த நிதித்திரட்டலானது மக்கள் கத்தோலிக்கச் சங்க (Folkekirkens Nødhjælp) அமைப்பு மூலம் நேரடியாக வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கப்படும்.

மேலும் பல தமிழ்-டெனிஸ் நட்புறவுச் சங்கங்களானது கடந்த ஆறு மாதங்களுக்கு முன் முன்மாதிரிச் செயற்பாட்டாக ஓர் கூட்டமைப்பினை ஏற்படுத்திக் கொண்டது. இதன்பால் நல்ல நடவடிக்கையாக இலங்கையில் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களுக்கென இவ்வுதவித் திட்டத்தினை செயற்படுத்த தொடங்கியுள்ளது.

மற்றும் இச்சங்கங்களின் கூட்டமைப்பானது இந்நாட்டிலுள்ள சங்கங்களின் கூட்டமைப்பில் இணைந்து செயற்படும் தனிச்சங்கங்களுக்கு; உதவிகள், வழிகாட்டுதலினை வழங்குவதாகும்.

www.tamilarangam.net



இலங்கையில் 11.06.1990 க்குப்பிற்பாடு ஏற்பட்ட அமைதிக்குப் பின் மீண்டும் உள்நாட்டு யுத்தம் வடக்கு-கிழக்கு பகுதிகளில் ஆரம்பமானது. இதனால் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொலை செய்யப்பட்டார்கள். வீடுகள், நகரங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் என்றும் பல அழிக்கப்பட்டன. இதன் காரணமாக இலட்சக்கணக்கில் மக்கள் இலங்கையின் வேறு பகுதிகளுக்கும், இந்தியாவுக்கும் இடம் பெயர்ந்துள்ளனர். இலங்கையிலிருந்து கிடைத்த நம்பிக்கையான தகவலின்படி உடனடியாக வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு பெரும் உதவிகள் தேவைப்படுவதாகவுள்ளது. திரட்டப்படும் நிதி உதவியானது எந்தவித தவறான இடங்களுக்கும் செல்லாமல் நேரடியாக பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்றடையும்.

இதன் கடமைப்பாடாக நாம் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவிகள் நல்கிவரும் பல பொதுச் சபைகளுடன் தொடர்பு கொண்டதில் மக்கள் கத்தோலிக்க பொதுச் சபை (Folkekirkens Nødhjælp) ஒன்று மட்டுமே சகல தடைகளையும் தாண்டி இலங்கையின் வடக்கு-கிழக்குக்கு நேரடியாகச் சென்று உதவி நல்குபவர்கள் என்பதனையும், அவர்கள் மற்றைய ஸ்தாபனங்களை விட முன்வந்து, எம்முடன் தொடர்பு கொண்டு விளக்கமளித்துள்ளார்கள்.

# முக்கிய கவனத்திற்கு.

சஞ்சீவியின் கலந்துரையாடல் எதிர் வரும் 30-03-91 (சனி காலை 9 மணிக்கு) நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ள விரும்பும் வாசகர்கள், எழுத்தாளர்கள் தங்கள் பெயர் விபரங்களை மிகவிரைவில் அறியத்தந்து நிகழ்ச்சி ஒழுங்கு நிரல்களுக்கு உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம். மேலும் தங்குமிட வசதிகள், போக்குவரத்து செலவில் ஒரு பகுதியும் இந்நிகழ்ச்சியில் பங்கு கொள்பவர்கட்கு வழங்கப்படும் என்பதனை முன் கூட்டியே அறியத்தருகின்றோம்.

சஞ்சீவி

www.tamilarangam.net



யாழ்குடா நாட்டின் மேற்றிராணியார் உயர் திரு D.J. அம்பலவாணர் அவர்கள் இந்த நேரடி உதவிகட்கான பொறுப்பாளராக உள்ளார். மேலும் கடந்த காலங்களில் இவர்களது மேற்பார்வையின் கீழ் வடக்கு- கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு கொழும்பிலிருந்து லொறி, வாகனங்கள் மூலம் அத்தியாவசியப் பொருள்கள் கொண்டுவரப்பட்டு, வழங்கப்பட்டது எனவும் அவர்களது அறிக்கை கூறுகிறது.

சேர்க்கப்படும் நிதியானது வடக்கு- கிழக்கு வாழ் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மத வேறுபாடின்றி வழங்கப்படும். மக்கள் கத்தோலிக்கச் சபையானது ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க பகுதிகளுக்கு உதவி நல்கிவருகிறது. இவ்ஸ்தாபனமானது டெனிஸ் மக்கள், டென்மார்க் அரசு (E.F) ஐரோப்பிய நாடுகள் சங்கத்திடமிருந்தும் உதவிப் பணம் பெற்று வருகிறது. 1989ம் ஆண்டு மக்கள் கத்தோலிக்கச் சபையானது பொது மக்களிடம் இருந்தும், டென்மார்க் அரசிடமிருந்தும் 70 Mio kroner ஐயும், E.F விடமிருந்து 280 MIO. kr. பெற்று யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மொசாம்பிக், சூடான், எதியோப்பியா போன்ற நாடுகளுக்கும், இன்னும் பல அபிவிருத்தித் திட்டங்களுக்கும் பயன் படுத்தியுள்ளது.

தமிழ்- டெனிஸ் நட்புறவுச் சங்கங்களும், மக்கள் கத்தோலிக்க சபையும் இணைந்து பேசியதன் பயனாக மக்கள் கத்தோலிக்க சபையின் (Folkekirkens Nødhjælp) காசுச் சீட்டு கணக்கு இலக்கத்தினைப் பெற்றுள்ளது. அதன் இலக்கமானது GIRO: 5 40 00 23 ஆகும். கீழ்காணும் அடையாளம் இடப்பட்ட (GIRO KORT) காசுச் சீட்டினை நீங்-

**Nødhjælp til Nord- og Øst Sri Lanka**

***De tamilsk-danske venskabsforeningers indsamling via Folkekirkens Nødhjælp***

www.tamilarangam.net



கள் நிதி செலுத்திப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

1991 ஆம் ஆண்டின் நமப்பகுதியில் நாம் வடக்கு-கிழக்கு உதவிக்காக திரட்டப்பட்ட நிதிக் கணக்கு விபரங்களை "சஞ்சீவி"யில் வெளியிடுவோம்.

மேலும் ஒவ்வொருவரும் 300Kr முதல் 1300 Kr வரை பணம் செலுத்தியிருந்தால் இறுதி 1000 Kr வரை வரிச்சலுகையாக மீளக் கிடைக்கும். நாம் உங்களைக் கோருவது விரைந்து இவ்வுதவிக்கு, உங்கள் பங்களிப்பாக உங்களால் முடிந்த அளவு நிதியினைச் செலுத்தி ஒத்துழைப்பு நல்குவதே. இந் நிதிச் சேர்ப்பானது சில மாதங்களுக்கே தொடர்ந்திருக்கும்.

இச் சேவையின் மூலம், இந் நாட்டிலுள்ள தமிழ்-டெனிஸ் நட்புறவுச் சங்கங்களின் கூட்டுறவுச் சேவையில் இணைந்து கொள்ளாத மற்றைய சங்கங்களினையும், டெனிஸ் நண்பர்களையும் நிதிச் சேர்ப்பின் மூலம் ஒருங்கிணைத்து செயற்படுத்தவுமாகும்.

(உ+ம்) நிதி உதவிக்கான விழாவினை நடாத்தி இந்த நடவடிக்கைகள் பற்றி எடுத்துக்கூறி சேரும் பணத்தினை இந்நிதிச் சேர்ப்பிற்கு வழங்குதலும், உள்நாட்டுப் பத்திரிகை நிருபர்களை அழைத்து, அவர்களுக்கு இது பற்றி விளக்கம் அளித்தும், பத்திரிகைகளில் தகவல்களை வெளியிடுவதன் மூலம் நிதி திரட்டலாம்.

உங்களுக்கு இந் நிதி செலுத்தும் பத்திரம் (GIRO KORT) தேவையானோர் எத்தனை தேவை என்பதனையும், உங்கள் சரியான முகவரியினையும் எமக்கு எழுதினால் நாம் உங்களுக்கு அனுப்பி வைப்போம். (சஞ்சீவியின் முகவரிக்கு எழுதுங்கள்)

"உங்கள் ஆதரவுக்கு நன்றிகள்"

(Per Daugbjerg) - Holstebro.
த.டெ.ந.ச. செயலாளர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கடிதங்கள்

அன்புடன் சஞ்சீவி ஆசிரியர்குழுவுக்கு,

பலத்த பிரயத்தனத்தினாலும் இடைவிடாமல் ஒருசில தனிநபர்களின் முயற்சியினாலும் தற்போது சஞ்சீவி 12வது இதழ்களை வெளியிட்டது மிகப்பெரிய சாதனையே. ஆனால் இந்த சஞ்சீவி எங்கே செல்கிறது? இதன் சாதனைதான் என்ன? வெறுமனே கற்பனா வாதம் தானா? வாசகர்களை எப்படி ஊக்குவிப்பது, ஒருங்கிணைப்பது, சமுதாயத்திற்கு இத-னால் என்னபயன்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் ஆசிரி-யர் குழு பதில் கண்டாகவேண்டும்.

பன்னிரண்டாவது (இவர் குறிப்பிடுவது இதழ் 11ல்) இதழில் புனைபெயர் பற்றிய ஒரு துணுக்கை நான் பார்த்தே-ன். துணுக்கை மீண்டும் ஒரு தடவை படித்துப்பார்த்தால் அதன் தவறு புரியும். நாம் சொந்தப் பெயர் எனக்கூறுவது எமது சொந்தப்பெயரல்ல, நமது பெற்றோர் வைத்த பெயரே. புனைபெயரை நாம் வைப்பது அதுதான் ஒருவகையில் சொந்-தப் பெயர். "சொந்தப் பெயரில்" எழுதினால் மக்கள் என்ன நினைப்பார்கள்! இவரா? இவர் யார், இவரது போக்கு எப்-படி? கொள்கை என்ன? இவரது சொல்லுக்கும் செயலு-க்கும் இடையில் எவ்வளவு ஒற்றுமை உண்டு என சிந்தித்து நல்ல விடயங்களைக் கூட ஏற்க மறுப்பர். எனவேதான் புனை பெயரில் எழுதவேண்டும்.

www.tamilarangam.net



பதினோராவது இதழில் மீராவின் 'புதுப் பொம்மைகள்' மிகமிக யதார்த்தமானது. ஆனால் அவர் சொல்லவருகின்ற விடயத்தில் எமது சமுதாயக் கடமைகளிலிருந்து நாம் விடுபட வேண்டும் என்கிறாரா? எமது நாட்டில் தமிழ் மக்கள் குறிப்பாக கிட்டத்தட்ட அறுபதை தாண்டியவர்களில் பெரும்பாலானோர் தமது பிள்ளைகளை செய்யக்கூடியது, செய்யக்கூடாதது எனப் பிரித்து கோடு போட்டு கட்டுப் படுத்திவிடுவர். (ஆங்கிலத்தில் இதை DO'S and DONT'S என்பர்) இது மாற்றப்பட வேண்டும். மற்றும் படி நாம் எமது உறவினர்களுக்கு உதவும் விடயத்தில் எமது கடமையை மாற்றுவது நல்லதா? (கதையில் குறிப்பிடுவது போல) இங்கு வந்த பெண்களில் சிலர் தமது குடும்பப் பொறுப்புகளை மறந்து சுயவளர்ச்சியில் மட்டும் கவனம் செலுத்துவது சரியா? ஏன் ஆண்களில் கூட சிலர் தன்னை மறந்து வாழ்வதுண்டோ?

நமது பெற்றோர் அல்லது சகோதரர் தாம் தமது பணத்தை செலவு செய்யக்கூடாது என நினைத்திருந்தால் நாம் கல்வியறிவு பெறுவது எப்படி? வெளிநாடு வருவது எப்படி? ஒரு எழுத்தாளன் தவறுகளை சுட்டிக்காட்டுபவனாக மட்டும் இருக்கக் கூடாது. சரியான தீர்வை முன்வைப்பவனாகவும் இருக்க வேண்டும். இங்கே நமது பிள்ளைகள் மாறிவிட்டால், அங்கே நமது சமுதாயம் மாறிவிடாது. எனவே மாற்றப்பட வேண்டியது நமது நாட்டின் பொருளாதார அமைப்புமுறையே. அக்கினி காண்டத்திலும் SIN Ø, COS Ø, ICMA போன்ற பல சொற்கள் கூறப்படுகின்றன. எனக்குத் தெரிந்த வரை க.பொ.த. உயர்தரம் கணிதம் அல்லது சாதாரணதரம் பிரயோக கணிதம் படித்தவர்கட்கு மட்டுமே தெரிந்த சொற்கள் தான் sin φ, cos φ என்பன. டென்மார்க்கில் வாழ்கின்ற தமிழ் மக்களில் விரல்விட்டு எண்ணக்கூடியவருக்கே இது தெரியும். அதிலும் சஞ்சீவி வாசகர்கள் எத்தனையோ தெரியாது

www.tamilarangam.net



எனவே மக்களுக்கு புரியும் மொழியில் விடையங்களை எழுதுவதே நல்லது. "தோமஸ் ஈப்பன்" எழுதிய இலகு கணிதம் போல் இருந்தால் பலருக்கு இலாபம். TRY TO SIMPLIFY YOUR FORMULAS THEN YOU WILL END UP IN A VAST MAJORITY OF READERS.

அடுத்து அரசியலை எழுதக்கூடாது என எண்ணுவது மிகப்பாரிய தவறு. அரசியல் என்றால் ஐந்து தமிழ் விடுதலை அமைப்புகளல்ல. ஒரு மனிதன் சமுதாயமாக வாழும் முறையே அரசியல், ஒரு மனிதனின் நாட்டினதும், சர்வதேசத்தினதும் அரசியல், பொருளாதார நிலைமைகளை அவனது வாழ்வை தீர்மானிப்பவை என்பதை சஞ்சீவி ஆசிரியர் கூட அறியாரா? அதற்காக ஆபிரகாம் லிங்கனையோ, கென்னடியையோ, மார்க்ஸ், லெனினையோ அழைப்பதல்ல. அரசியல் விழிப்புணர்ச்சியற்ற ஒரு சமுதாயம் மந்தைகளாகவல்லவா இருக்கமுடியும். மத்திய கிழக்கு நிலைமைகள் குறித்து எத்தனை தமிழர் இது எம்மையும் பாதிக்கும் விடயம் என நினைக்கின்றனர். நாளை ஐரோப்பிய ஒருங்கிணைப்பின் பின் மூன்றாம் உலகநாட்டு மக்கள் இங்கே எதிரிகளாக சித்தரிக்கப்பட போகின்றனரே இது பற்றி எத்தனைபேர் அலட்டிக்கொள்கின்றனர்?

"சஞ்சீவி" வெளியிட்ட சிறார்களின் பொதுப்பாடத்திட்ட (தமிழ் பாடம்) முன்மொழிவு பற்றி எத்தனைபேர் அலட்டிக் கொண்டிருக்கிறோம். யார் என்ன முயற்சி செய்தோம்? இது கடிதம் என்பதால் இறுதியாக ஒரு விடயத்தை மட்டும் கூறி முடிக்கிறேன். ஐரோப்பா ஒரு வசந்த பூமி எனவும் இதுவே நமது எதிர்கால பூமி எனவும் எண்ணி வாழ நினைத்தோமானால் இறுதியில் கண்ணீர் விடுவதற்கே நேரம் கிடைக்காமல் எமது உயிர் பறிக்கப்படலாம். பனிப்போர் இப்படி திடீரென முடிவுக்கு வந்-

www.tamilarangam.net



● காலத்தின் தேவையை ஒட்டியே எந்த ஒரு தீர்வும் உருவாகிறது. தேவை பூர்த்தி செய்யப்படும் போது அந்த தீர்வு தனது பயன்பாட்டை இழக்கிறது, ஏனெனில் அதன் பின் தோன்றுகிற புதிய பிரச்சினைகள் சகல அம்சங்களிலும் பழைய பிரச்சினைகளிலிருந்து வேறுபட்டிருப்பதால் பழைய தீர்வுகள் பயன்படாது போகிறது●

-து போராட்டமையம் ஐரோப்பாவிலிருந்து மத்திய கிழக்குக்கு அதாவது ஆசிய, ஆபிரிக்க பகுதிக்கு மாற்றப்பட்டது போல் கால ஓட்டத்தில்-

— அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்குமிடையேயான பொருளாதாரப் போர் ஆரம்பிக்கப்படலாம்.

எனவே இதற்கு சஞ்சீவி தன் வாசகரை தயார்படுத்தவேண்டும் எனக்கேட்டு விடை பெறுகிறேன்.

நன்றி.

அன்புடன்
ஜே. ஆர். நாயகன்●

அன்புடன் வாசகர் திரு- ஜே- ஆர்-நாயகன் அவர்கட்கு•

உங்கள் நீண்ட கடிதம் எமக்கு புதிய உற்சாகத்தை அளித்துள்ளது. நீண்ட கடிதம் ஒன்றினை எழுதும் அளவுக்கு சஞ்சீவியில் உங்களது நம்பிக்கையையும் காணமுடிகிறது. இருந்தும் கடிதத்தின் ஆரம்பத்தில் கேள்விகளைக் கேட்டுவிட்டு நீங்கள் தொடர்ந்து உங்கள் கருத்துக்களைச் சொல்வதால் வாசகர்கள் மத்தியில் நீங்கள் கேட்ட கேள்விகளுக்கு இனித்தான் பதில் கண்டாக வேண்டும் என்று ஒரு ஐயம் எழுவதற்கு ஆசிரியர் குழுவினரே காரணமாக அமையக்கூடாது என்பதற்காக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முதலில் உங்கள் கேள்விகளை சற்றுப்பார்க்கலாம்.

சிலரது தனிமுயற்சி என்பது தவறு என்று தான் சொல்ல வேண்டும். உங்களது முதல் கேள்வியான இந்தச் சஞ்சீவி எங்கே செல்கிறது? இப்பத்திரிகையினை ஆரம்பித்த காலத்தில் இதற்காக உழைத்தவர்களையும், இன்று வரை உழைப்பவர்களையும், வாசகர்களையும் குழப்பத்துக்குள்ளாக்கும் வகையில் இக்கேள்வியானது அமைகின்றது. "சஞ்சீவி ஒரு வழிகாட்டும் தெருப்பலகையல்ல" இன்னும் தெளிவாகச் சொன்னால் எவருடனும் பின் கதவால் கைகுலுக்கவும் இல்லை, எந்த இயக்கத்துடனும் கை கோர்க்கவும் இல்லை. எமக்கு சரியெனப்பட்டதைச் செய்கின்றோம். எமது பிழைகளை யார் எடுத்துச் சொன்னாலும் எம்மைத் திருத்திக் கொள்வோம்.

அடுத்து, சாதனைதான் என்ன? என்ற கேள்வியைப் பார்ப்போம். வாசகரே நீங்களே கடிதத்தின் ஆரம்பத்தில் 12 மலர்களை வெளியிட்டது சாதனை என்று குறிப்பிட்டுள்ளீர்கள். அதுவல்ல சாதனை "தனி ஒருவரின் ஆளுமையின் கீழ்த்தான் பத்திரிகை வெளியிடுவது சாத்தியம்." என்ற பிழையான கருத்தினை தவறென நிரூபிக்கும் வகையில் "கூட்டு முயற்சியாலும் பத்திரிகை வெளியிட முடியும்" என்பதை நிரூபித்தது தான் சாதனை என்று சொல்லமுடியும். ஆனால் சாதனை என்பது ஒரு பிழையான தெரிப்பு என்றுதான் சொல்லவேண்டும். இது ஒரு பரீட்சார்த்த வேலை முறையின் ஆரம்பம் தான், இந்த வேலைமுறையினை உருவாக்குவிப்பது வாசகர்கள், எழுத்தாளர்களின் கைகளில் தான் தங்கியுள்ளது.

வெறும் கற்பனா வாதம் தானா? இந்த கேள்வியைப் பார்ப்போம். கற்பனாவாதம் என்றால் என்ன? நடைமுறைக்கும், சொல்லும் விசயத்துக்கும் எந்த விதமான ஒற்றுமையும் இல்லாமல் மனம் போன போக்கில் செய்வது தான், ஆனால் எமது பத்திரிகை வேலை முறையானது எமக்கு தெரிந்த அறிவுக் கெட்டியபடி ஒவ்வொரு மலருக்கும் எமது சந்திப்பும், அதற்கான கூட்ட அறிக்-

www.tamilarangam.net



கைகளும், சரி,பிழை பற்றிய விவாதங்களின் பின்பு தான் ஒரு மரபை வெளிக் கொண்டு வருகின்றோம். எனவே கற்பனா வாதம் தானா? என்ற கேள்வியே கற்பனா வாத அடிப்படையில் சொல்லப்பட்டது என்று தான் சொல்ல வேண்டும்.

வாசர்களை எப்படி ஊக்குவிப்பது, ஒருங்கிணைப்பது, சமூகத்துக்கு இதனால் என்ன பயன்? என்ற கேள்வியைப் பார்ப்போம் வாசகனை எப்படி ஊக்குவிப்பது, ஒருங்கிணைப்பது என்பதை விட வாசகனையும், எழுத்தாளனையும் ஒருங்கிணைக்கவும், ஊக்குவிப்பதற்காகவும் தான் எங்களால் அறிவிக்கப்பட்ட முதல் கலந்துரையாடலாகும். இக் கலந்துரையாடலின் மூலம் தான், வாசகர்கள், எழுத்தாளர்கள், ஆசிரியர் குழு ஆகிய இந்த மூன்று பிரிவினரும் புரிந்துணர்வின் அடிப்படையில் ஒரு குறைந்த பட்ச ஒருமைப்பாட்டுக்கு வரமுடியும். அந்த ஒருமைப்பாட்டின் அடிப்படையில் தான் ஊக்குவிப்பும், ஒருங்கிணைப்பும் நடைபெறமுடியும். வாசகரே கொள்கைகளை படிக்கும் போதும் சொல்லும் போது அக் கொள்கையானது சமூக அனுபவத்தினூடாகப் பெறப்பட்டது என்பதை மறக்கக் கூடாது. மறந்தால் அக் கொள்கை ஏட்டுச் சுரக்காய் போல் ஆகிவிடும்.

சமூகத்துக்கு என்ன பயன்? இன்று டென்மார்க்கில் எமது இளைய தலைமுறையினர் எமது தாய் நாட்டின் சூழலை விட புதிய ஒரு சூழலில் வாழுகின்றனர். எனவே இந்த புதிய சூழலுடன் எமது தமிழ் மொழியானது இணைக்கப்பட்டு அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். இதுவே இன்றைய காலகட்டத்தின் தேவை. இந்த தேவையினை சஞ்சீவி உணர்ந்ததனால் தான் எமது ஒருபாடத்திட்ட (சிலபஸ்) முன் மொழிவும், அதை தொடர்ந்து எமது சக்திக் கேற்ப வேலை முறையும்.

மேலும் "வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களுக்கான நிவாரண நிதி சேகரிப்பு" இந்த நிதி திரட்டலுடன் நின்று விடாது நிதி சேகரிப்பின் கணக்கு விபரங்களும் சஞ்சீவியில் வெளியிடப்படும். இதுவே எம்மால் முடிந்த சமூகத்துக்கான பயன்-

www.tamilarangam.net



பாடாகும்.

புனை பெயரில் எழுதுபவர்களை மயர் 11ல் வெளியான துணுக்கு சற்று பாதித்தது என்பது உண்மையே இப்படியான விசயம் இனிக்கவனத்தில் எடுக்கப்படும்.

மீராவின் புதுப் பொம்மைகள் பற்றி.... மனிதனது உணர்வுகளும், அவன் வாழும் சூழல் குறித்த அனுபவங்களின் வெளிப்பாடுகளுமே "கலை இலக்கியம்" மக்களின் வாழ்விலிருந்து கற்றுக் கொண்டதையும், அறிந்து கொண்டதையும் செழுமைப்படுத்தி கலை இலக்கியமாக மக்களிடம் திருப்பிக் கொடுக்கின்றான் படைப்பாளி. உண்மையில் மக்களின் வாழ்வு தான் கலை இலக்கியத்தின் ஊற்று.... டென்மார்க்கில் வர்க்கரீதியான ஒரு கணிப்பீடு, நீங்கள் சொல்ல முற்படும் அரசியலின் அடிப்படையில் நடத்தினால்! மீராவின் புதுப் பொம்மைகளில் வரும் "மூர்த்தி, தேவி" போன்றோர் தான் இன்று மிகவும் பிரச்சனைக்குரியவர்களாக இருக்கின்றனர். அந்த மக்களின் நாளாந்தப் பிரச்சனைகளை எழுதுவது இன்றைய கால கட்டத்தின் தேவை என்று தான் சொல்ல வேண்டும்.

நீங்கள் குறிப்பிடும் "தீர்வு" ஒரு குடும்பசூழலுடன் அவர் மூர்த்தியை தேவியும். தேவியை மூர்த்தி யும் புரிந்து கொள்ளும் அடிப்படை யில் பிரச்சனைக்கு தீர்வும் சொல்லியுள்ளார் இது போதுமானது என்றுதான் சொல்லவேண்டும். எமது டென்மார் வாழ்வுடன் இன்று எம்மவர் திருப்திப்படும் மனநிலை இல்லை அவர்கள் ஆங்கிலக்கவர்ச்சி, வேற்று நாட்டுக்கு நிரந்தர குடியெயர்வு என்று நினைவில் தான் உள்ளது. இந்தச் சூழ்நிலைமைகளை மனதில் எடுத்துக் கொண்டு இதற்குள்ளால் தான் எமது நாட்டுப்பிரச்சனையை நாம் அணுகமுடியும்.

அரசியலை எழுதக்கூடாது.... அரசியல் என்றால் எங்களுக்கு ஒத்துகொள்ளாதது (ALERGY) அல்ல, எமது கலந்துரையாடல் முடிவுகள் தான் பதில் சொல்ல வேண்டும். ஒத்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



த கருத்தை உடைய சிலர் கூடி ஒரு பத்திரிகையினை விடுவதற்கே சங்கடமான இவ்வேளை. ஒரு கலை இலக்கிய மலரினை வெளியிடுவதில் உள்ள சிரமத்தினை நீங்களும் வாசகர்களும் உணராமல் இருக்கமுடியாது.

மேலும் வாசகர்களையும், எழுத்தாளர்களையும் எமது இந்த பத்திரிக்கைவெளி முறைக்கு ஒத்துழைப்பு நல்கி ஊக்குவிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இப்படிக்கு
சஞ்சீவி ஆசிரியர் குழு

வேண்டுகோள் !!!

இலங்கையின் வடக்கு-கிழக்குவாழ் உள்நாட்டு யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிதி சேர்க்குமுகமாக 02.02.1991 அன்று நடாத்தப்பட்ட விழாவின் போது சேகரிப்புப் பணமாக 8939 Kr- சேர்ந்துள்ளது. இப்பணம் Nødhjelp கணக்கில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இவ் விழாவுக்கு வருகை தந்தும், உதவிகள் நல்கியவர்களுக்கும், இலவசமாக நிகழ்ச்சிகளை நடாத்தி நிதி சேகரிப்பை ஊக்குவித்தவர்களுக்கும் நாம் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் மற்றைய நகரங்களில் வாழும் தமிழ் மக்களும் இது போன்று நிகழ்ச்சிகளையோ அல்லது நீங்களாகவோ இலங்கை வாழ் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களுக்கு உதவுவதற்காக நிதி சேகரித்து ஒத்துழைப்பு நல்குமாறு பணிவன்புடன் கோருகிறோம்.

இந் நிதி சேகரிப்புக் கணக்கு விபரங்கள் யாவும் பின்பு சஞ்சீவியில் வெளியிடப்படும்.

(பொன். மகேஸ்வரன்)
விழாப் பொறுப்பாளர்
தமிழ்-டெனிஸ் நட்புறவுச் சங்கம்
கொஸ்ரப் ரோ.

www.tamilarangam.net





# நஞ்சளி

•மீரா•

புகையிரதம் ஒருகை இன்னும் ஓர் மணிநேரத்திலுள் அடைந்து விடும்.

காலையில் கொப்பனேகனில் ஏறியது முதல் இந்த ஆறு மணிநேரமும் பிள்ளை குழந்தைகள் அடம்பிடித்து கோணர் சீற்றில் இருப்பது போலவே இருந்து கொண்டு, எதிரே ஓடும் வாகனங்கள் -வயல்கள்- கம்பித் தூண்களில் கண்கள் தம்பாட்டில் பதிந்திருக்க தான் எதிலுமே ஒட்டாத துறவிபோல் அமர்ந்திருந்தார் சாம்பசிவமூர்த்தி; சாம்புமாமா.

"சாம்புமாமா! நீங்கள் கட்டாயமாக நேரில் வந்தால் தான் எல்லாம் சரிவரும், இல்லாட்டி எங்கடை மானம் அவளாலே சந்திசிரிக்கப் போகுது", சிவநாயகமும் பரிமளமும் ரெலிபோனில் கதறிய பரிதாபம் தாங்காமல் தான் சாம்பு மாமா ரெயின் ஏறினார்.

சாம்புமாமா! வந்த இருவருட காலத்துள் இரண்டு மகள்களையும் ஊரில் கரைசேர்த்து விட்டு, "கடைக்குட்டிக்கும் காசு சேர்த்தால் என்னுடைய டென்மார்க் வாழ்க்கை சரி" என்ற ஓர் பிடிவாதத்துடன் வந்த குடும்ப இணைப்பு சந்தர்ப்பத்தையும் உதறிவிட்டு, ஊர் திரும்பும் நாளை எண்ணும் தினம் தினம் காத்திருக்-

www.tamilarangam.net



டும் ஓர் சாதாரணமான 53 வயது மனிதர்.

அவரின் வாழ்க்கை முறைகளும், வாழ்க்கைமீது அவர் கொண்டிருந்த பார்வையும் அவருடன் பலர் தம்மை இணைக்கக் காரணமாயிருந்தது, மட்டுமல்லாது, வயதுவித்தியாசமில்லாது அனைவருக்கும் அவர் 'சம்புமாமா'வாக காரணமாய் அமைந்தது.

அவ்வகையில் 1984ல் மிஷல்பாட் காம்பில் சாம்புமாமாவுக்கு ஏற்பட்ட சந்திப்புக்களில் ஒன்று தான் சிவநாயகம் குடும்பம், மனைவி பரிமளம், மகள் ரஞ்சினி, இளைய பையன் சுரேஸ்.

"சாம்புமாமா! சாம்புமாமா! தம்பியையும் கூட்டிக்கொண்டு நாங்கள் மூவரும் வோக்கிங் போவோமா" செல்லமாக ரஞ்சினி கதைத்தது எல்லாமே நேற்றுப் போல் இருந்தது. காலம் ஓடிய வேகத்தை அவரால் நம்பவே முடியவில்லை.

அப்போது ரஞ்சனிக்கு 11 வயது. பயங்கரச் சுட்டிப்பெண். கல்சர் கிளாசில் "பைந்தமிழ் சோலையிலே" பாடினால் அந்த அழிப்" பரவசம் அனைவரிலும் காணப்படும். சலங்கை இல்லாவிட்டாலும் சின்னமணிகளைக் கோர்த்து ஆடினால், அந்த நடராஜமூர்த்தியே பெண் உருவில் வந்திருக்கின்றார் என பரவசப்படுவார் சாம்புமாமா.

அந்த ரஞ்சனியால் தான் இன்று பிரச்சினை எனத் தாயும் தகப்பனும், டெலிபோனில் கதறிய போது, தாயும் தகப்பனும் கூட மறுக்கின்ற அல்லது அவர்களுக்கே புரியாத ஓர் இரகசியம் அந்தக் குடும்பத்திற்கு உள்ளோ அன்றி வெளியோ இருக்கவேண்டுமே தவிர நிச்சயம் அந்த ரஞ்சனி காரணமாய் இருக்க மாட்டாள், என சாம்புமாமாவின் மனம் பிடிவாதமாக சொல்லிக் கொண்டது.

நேரில் சந்தித்துக் கதைத்த பிறகுதான் முழு உண்மையும் தெரியும். டெலிபோனில் கேட்டது எல்லாம் சீறிட்ட இடத்தை-நிரப்பும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாசகங்கள் தான். அதைவிட ரஞ்சனியுடன் எந்த வார்த்தையும் கதைக்கவில்லை.

பிடிப்பாட்டிலிருந்து சிவநாயகம் குடும்பமும், சாம்புமாமாவும் பிரிந்த பிறகு ஒருவருக்கும் கொப்பனேக்கனுக்கும் மாறிச் சென்ற பின் தின-ம் தினமும் பின்கிழமைக்கு ஓர் கிழமையும் பின் மாதத்திற்கு ஓர் தடவையும் ரெலிபோனில் கதைத்துக் கொண்டு வந்தவர்கள் பின் அதுவும் நன்கு குறைந்து நல்லநாள் பெரியநாளில் எடு-த்து வாழ்த்துக் கூறி சுகங்களை பரிமாறிக் கொண்டார்கள்.

அதிலும் கடைசியாகக் கூட கதைத்த நேரம் எப்போ என சாம்புமாமாவுக்கு ஞாபகம் இருக்கின்றது.

அது ரஞ்சனிக்கு வயது வந்தபோது தான். தன் பொருளாதா-ர பிரச்சினைகளினால் தன் மூன்று பெண்களில் எந்தப் பிள்ளைக்கும் கூட நிறைவாக நாலு பேருக்குச் சொல்லி தலைக்கு தண்ணி வார்க்கவில்லை என்ற ஆதங்கம் சாம்புமாமாவுக்கு எப்போதும் இருந்து வந்தது. ஆகவே தான் ரஞ்சனி விடயத்தை கேள்விப்பட்ட போது ஏதோ தன் குழந்தை என்ற உரிமையை அதிகம் எடுத்த-வராக,

"அப்ப பரிமளம் பிள்ளைக்கு வடிவாய்ச் செய்வோம்" ரெலிபோனில் அவர் குரல் குதூகலித்தது.

ரெலிபோனின் மறுமுனையில் மௌனம்.

"என்ன பிள்ளை யோசிக்கின்றாய்! நானே வாறன். நீ ஒன்றுக்கும் பயப்படாதே. நானே வந்து எல்லாவற்றையும் நடத்தி வைக்கிறன்".

"இல்லை மாமா!..... இப்ப உதுகள் செய்யுறது எல்லாம் டீசன்ற் இல்லை. இனி டெனிஸ்க் காரர்களுக்கும் விருந்து சொல்லிக் கொண்டிருக்கேலாது. பேசாமல் இந்தக்

www.tamilarangam.net



கிழமை வீட்டிலை நின்றிட்டு அடுத்த கிழமை பள்ளிக்கூடம் போகட்டும்."

சாம்புமாமாவின் குதூகலம் எல்லாம் கை கட்டிக் கொண்டன.

"சரி பிள்ளையைக் கூப்பிடு" என ரஞ்சனியை அழைத்து "நல்லாய் இருக்க வேணும் அம்மா" என கண்கலங்க வாழ்த்தி விட்டு ரெலிபோனை வைத்தார். ஏனோ அன்று வேலைக்கும் போகவில்லை. அறையுள்ளேயே இருந்தார்.

கொப்பனேக்கனிலிருந்து ஒஸ்லோவரை ஓடிய களைப்பைத் தீர்த்தது போல மெதுவாய் வேகத்தைக் குறைத்து அப்பாடா என மூன்றாம் நம்பர் பிளாட்பாரத்தில் இன்ரசிற்றி வந்து நின்றது.

சாம்புமாமா எட்டிப் பார்த்தார். சுரேசைக் காணவில்லை. தனது சின்ன தோள்பையையும் எடுத்துக் கொண்டு மெதுவாய் இறங்கி வந்தார். அவருடன் ஆரம்ப காலத்தில் சென்றல் காம்பிலிருந்த ஓர் தமிழ்க்குடும்பம் நின்றார்கள். பரஸ்பரமாக சிரித்துக் கொண்டார்கள். சுகம் விசாரித்துக் கொண்டார்கள். தூரத்தில் சிவநாயகம் இளைக்க இளைக்க ஓட்டமும் நடையுமாய் வந்தது தெரிந்தது.

"நான் சிவநாயகம் வீட்டை தான் வந்தனான்"

"ஆ.... " சுவாரசியமில்லாமல் அவர்கள் தலையாட்டினார்கள்.

ஓடி வந்த சிவநாயகம், "என்ன மாமா கனநேரமோ"

"ச்சீ இப்பதான்"

"சரி வாங்கோ மாமா போவம்" (தொடர்ச்சி பக்: 42)

www.tamilarangam.net



# தமிழ் கொண்ட மகிமை! தமிழர் எம் பெருமை!

இலங்கையின் சுகவாசி நாங்கள் - இப்போ
டென்மார்க்கில் சுதந்திரமாய் வாழுவந்தோம் நாம்.

தமிழுக்கு தலைவணங்கி நின்றோம் அன்று - இன்று
டெனிஸ் மொழிதான் எங்களது தஞ்சம் என்று நின்றோம்.
தமிழ் பாடும் தலைவர்கள் நாம் - ஆனால்
தனியாக எதையும் சுயமாகச் செய்யோம்.

அடிமையை அடியோடு வெறுத்து - நாங்கள்
அன்னிய நாடென்று டென்மார்க் வந்தோம்.
இங்கே நாம் எப்படி ஆனோம் - இதை
யார் கேட்டு வந்தாலும் மறைவாகச் செல்வோம்.

எனக்காக நான் வாழுவேனே - இங்கு
எவன் கெட்டு எமக்கென்ன துயர் கொள்ளமாட்டோம்.
தருமங்கள் நாம் செய்வதரிது - அதை
செய்தால் அதன் பலனை எதிர்பார்ப்போம் என்றும்.

பிழையாக நாம் செய்யும் தவறை - சரியென்று
வாதாடி பெருமையைக் கொள்வோம்.
நம்பி நடக்க நாம் மாட்டோம் - ஆனால்
மற்றவன் எங்களை நம்பிட நடிப்போம்.

எதிலுமே எமக்குத்தான் வெற்றி - என்று
ஊருக்குப் பெருமையை பறை சாற்றிச் சொல்வோம்
இப்போது புரிந்ததா எம்மை - இனி நீர்
எப்போதும் மறவாதீர் எங்கள் கொள்கை.

- விமல் -
HOBRO

www.tamilarangam.net





# டெனிஸ் பத்திரிகை நிருபர் திரு. ஜோன் காபோவுடன் பேட்டி

சென்ற வருடம் இலங்கையின் கிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் செய்த டெனிஸ் பத்திரிகை நிருபர் திரு ஜோன் காபோ (Jørgen Harboe) அவர்கள் 16.02.91 சனிக்கிழமை கொல்ஸ்ரப்போ தமிழ்-டெனிஸ் நட்புறவுச் சங்கத்தின் சார்பில் கலாச்சார இல்லத்தில் நடைபெற்ற சொற்பொழிவில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்களையும் சஞ்சீவி சார்பில் அவரோடு உரையாடிய போது எடுத்துக் கொண்ட கருத்துக்களையும் இங்கு பேட்டி வடிவில் தருகின்றோம்.

கேள்வி:- இன்று பொதுவாக தமிழ் மக்களின் நிலைப்பாடு எப்படியுள்ளது.

பதில்:- பொதுவாக எல்லா மக்களும் பயந்து கொண்டு தான் வாழுகின்றார்கள். முஸ்லீம் மக்களால் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற "புனிதப்போர்", சிங்கள மக்கள் மத்தியில் அரசாங்கத்தினரால் உருவாக்கப்பட்டிருக்கின்ற "ஊர்காவல் படை" என்பவற்றினால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் கொஞ்சநஞ்சமல்ல. இவற்றோடு சில தமிழ் இயக்கங்கள் அரசாங்கத்தினரின் உளவாளிகளாக தொழிற்பட்டு இயங்குவதை தமிழ் மக்கள் நன்கு இனம் கண்டுள்ளனர். இந்த நிலையை எண்ணி மக்கள் நாளுக்கு நாள் பயந்து கொண்டிருக்கின்றனர்.

கேள்வி:- இந்த நிலையில் சிங்கள மக்களின் செயற்பாடு,-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்களின் நிலை எப்படியுள்ளது?

பதில் :- பொதுவாக சிங்கள மக்கள் அசட்டையீனமாகத் தான் இருக்கின்றார்கள். நான் கொழும்பில் நின்ற போது சில பேரோடு கதைக்க முனைந்த போது அவர்கள் இதைப்பற்றியே கதைக்க விரும்பாமல் கதைக்கும் கதையையே திசை திருப்புகின்றார்கள். இது பற்றிக் கதைக்க என்றாவும் விரும்புகின்றார்களில்லை.

கேள்வி :- கொழும்பில் இருக்கும் காலங்களில், வடமாகாணங்களிலோ கிழக்கு மாகாணங்களிலோ பிரச்சினைகள் நடைபெறுவதை உணரக் கூடியதாக இருக்கின்றதா?

பதில் :- கொழும்பில் வாழும் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் ஏன் சிங்கள மக்களுக்கும் கூட ஒன்றும் தெளிவாகத் தெரியாது. இருந்தும் பத்திரிகைகள் மூலமும் TV மூலமும் கிடைக்கின்ற செய்திகள் மூலம் ஓரளவு அறிகின்றார்கள். அந்தச் செய்திகளும் கூட அரசாங்கத்துக்கு சாதகமாகவே வெளியிடப்படுகின்றது. ஆனால் அங்கு வாழும் மக்களின் நிலையைக் கொண்டு இலங்கையிலே பிரச்சினைகள் இருப்பதாக அறிய முடியாது. கொழும்பைத் தாண்டிச் செல்லும் போது ஓரளவு உணர முடியும். இராணுவச் சோதனைகள் போக்குவரத்துப் பிரச்சினைகள். நான் வாழைச்சேனை மட்டும் ரயிலில் போனேன். ஓர் குறிப்பிட்ட இடங்களுக்குப் பின்னர் போக அனுமதி கிடைக்கவில்லை.

கேள்வி :- நீங்கள் சந்தித்த இராணுவத்தினரோடு கலந்துரையாட வாய்ப்புக்கள் ஏற்பட்டதா?

பதில் :- நான் பலமுறை அவர்களோடு கதைக்க முயற்சித்தேன் அவர்கள் மறுத்து விட்டார்கள். பல இடங்களில் முயற்சித்தேன் பலனில்லை.

www.tamilarangam.net



கேள்வி:- மட்டக்களப்பிலும் போய் நின்றதாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். அந்த இடத்து நிலைமை பற்றி கொஞ்சம் சொல்ல முடியுமா?

பதில்:- பெரும்பாலான மக்கள் நிலத்துக்கு கீழ் தான் வசிக்கின்றார்கள். சில மக்கள் காட்டில் போய் வாழ்கின்றார்கள். அந்த மக்களின் நிலை மிகவும் பரிதாபமானது. ஏறக்குறைய 60 பேரளவில் காட்டில் பாம்பு கடித்து இறந்துள்ளார்கள் என்பதை என்னால் அறிய முடிந்தது. இதை விட சில மக்கள் பாடசாலை அகதிமுகாங்களில் போய்க்குடியேறியுள்ளார்கள்.

கேள்வி:- அங்குள்ள அகதிமுகாங்களைப் பற்றி கொஞ்சம் தெளிவு படுத்த முடியுமா?

பதில்:- மூன்று பெரிய பாடசாலைகள் அகதிமுகாங்களாக்கப்பட்டிருக்கின்றது. ஏறக்குறைய 1000 மக்கள் அங்கு அகதிகளாக வாழ்கின்றார்கள். இங்கு குறிப்பிடும் படியாக மலசல கூட வசதிகள் சரியாக இயங்கவில்லை. இதன் காரணமாக வயிற்றோட்டம் போன்ற பல தொற்று நோய்கள் மக்கள் மத்தியில் அதிகம் பரவியிருக்கின்றது. இவற்றை விட குழந்தைகளின் நிலை தான் மிகவும் கவலைக்கிடமானது.

கேள்வி:- அந்த இடத்து உணவு, தண்ணி - போன்ற பிரச்சினை பற்றி சொல்ல முடியுமா?

பதில்:- அரசாங்கத்தினர், தான் கொடுக்கின்றனர் ஒரு ஆளுக்கு ஒரு மாதத்திற்கு 6kg அரிசி, 3kg மா 1/4kg சீனி கொடுக்கப்பட்டு வருகின்றது. அது கூட ஒழுங்காகக் கொடுக்கப்படுவதில்லை. அவர்கள் தங்கள் வசதிக்கேற்ற மாதிரிக் கொடுக்கின்றார்கள். தண்ணியைப் பொறுத்தவரையில் பாடசாலையிலுள்ள தண்ணியைத்

www.tamilarangam.net



பாவித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஒருமுறை பாடசா-லையில் தண்ணி நிற்பாட்டப்பட்டிருந்தது. அந்தப் பாடசாலை அதிபர் தனது அனுமதியில்லாமல் அங்கு குழாயை நிறுத்தியதால் நிற்பாட்டியிருக்கலாம் என்றும் இயக்கத்தினர் அக்கறையோடு -மை பார்வையிடுகின்றார்கள் என்பதால் நிற்பாட்டியிருக்கலாம் என்று சொல்லப்பட்டது. சரியானது என்னவென்று எனக்கு தெரியாது.

கேள்வி:- அங்கே எப்படியான உதவிநிறுவனங்கள் உதவிபுரிகின்-றனர்.

பதில்:- செஞ்சிலுவைச் சங்கத்தினர் மாத்திரம் தான் நிற்கின்றார்-கள். வேறு ஒரு நிறுவனங்களும் அங்கு செயற்படுவதாக எனக்குத் தெரியவில்லை.

கேள்வி:- அங்கு நடைபெற்ற பிரச்சினைகளை எங்கேயாவது நேரடியாகப் பார்த்திருக்கின்றீர்களா?

பதில்:- ஒரு சம்பவம் நடைபெறும் போதும் நேரடியாக பார்க்க கிடைக்கவில்லை, ஆனால், சம்பவங்கள் நடைபெற்று முடிந்த பின்னர் அந்த இடங்களைப் போய் பார்வையி-ட்டிருக்கின்றேன். இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு டயர் போட்டுக் கொளுத்திய இடங்களையும் அந்தச் சாம்பல்களையும் நேரடியாகப் பார்வையிட்-டேன்.

கேள்வி:- பாடசாலைகள் இயங்காத நிலை பற்றி?

பதில்:- பிரச்சினைகளால் இயங்காமல் இருக்கின்றது ஒருபுறம் இயக்கத்தினர் இயங்க வேண்டாம் எனவும் தடுத்திருக்-கின்றார்கள்.

கேள்வி:- அந்த இடத்து தொழிலாளர் நிலை பற்றி?

(தொடர்ச்சி பக்: 32)

www.tamilarangam.net


**Dansk Flygtningehjælp**

டேனிஷ் அகதிகளுதவி நிலையம்
கலாச்சார வீடு பற்றி அறிவிக்கின்றது.

கொல்ஸ்டபுரோ நகரத்துடன் தொடர்புள்ள எல்லா அகதிகளும், இங்கு வசிக்கும் வெளிநாட்டவர்களும், டேனிஷ் மக்களும் பயன்படுத்தலாம். அகதிகளுதவி நிலையம் கொல்ஸ்டபுரோ கொமுனையகம், டேனிஷ்-தமிழ் தோழமையொன்றியத்தினரும், கொல்ஸ்டபுரோ வட்டாரத்தின் குடியேறியோர் சங்கத்தினரும் மற்றும் பலரது ஒத்துழைப்புடனும் இதை ஆரம்பித்துள்ளது. வீடு பிரதி தினமும் காலை 9 முதல் மாலை 5 வரையும், சனி-ஞாயிறு நாட்களில் மணி 10 முதல் மாலை 5 வரை திறந்திருக்கும்.

'கபே அலாவுதீன்'

குறைந்த விலையில் கோப்பி, தேனீர் சூடான பலகாரவகைகள் வீட்டிலுள்ள சிறிய கபேயில் வாங்கலாம். வெளிநாட்டவர் சங்கத்தால் நடாத்தப்படும் இக்கபேயில் இங்கா அன்டர்சன் சமையலறைத்தலைவியாக வேலையுதவித் திட்டத்தின்கீழ் அமர்த்தப்பட்டுள்ளார்.

கபேயின் பணம் போட்டுப்பேசும் தொலைபேசி வெளிநாட்டவர் சங்கத்தின் பொறுப்பிலுள்ளது.

கடை யுனிக் - சலவை இயந்திரம் - போட்டோ பிரதி.

இவ்வீட்டில் ஒரு சிறிய கடையொன்று உள்ளது. இதில் அரிசி, பருப்பு, தூள், டின்னிலடைத்த பழங்கள், மற்றும் நெடுநாள் வைத்திருக்கக்கூடிய உணவுப்பொருட்கள் வாங்கலாம். வீட்டின் அடித்தளத்திலுள்ள சலவை இயந்திரங்களுக்கு சோப்பும் கழுவும் நாணயமும், வீட்டிலுள்ள பிரதியெடுக்கும் இயந்திரத்தில் பிரதி எடுப்பதற்கும் இக்கடை பொறுப்பாகவுள்ளது. டேனிஷ் தமிழ் தோழமையொன்றியத்தினால் நடத்தப்படும் இக்கடையில் எம். சி. லோகநாதன் பொறுப்பாகவுள்ளார். இவர் 43 வது பிரிவின்கீழ் உதவியாளராக அமர்த்தப்பட்டுள்ளார்.

பத்திரிகை - டிவி - வீடியோ - மேசைடென்னிஸ் - பில்லியாட்.

பிரதி தினமும் கபேயில் புதிய பத்திரிகைகள் தமிழிலும், டேனிஷிலும், குர்து விலும், அராபிய, துருக்கிய பாஷைகளிலும் வாசிக்கலாம். டென்மார்க் டிவி 1ம் 2ம் பார்க்கலாம். கடை உதவியாளரிடம் திறப்பு வேண்டி வெளியிலிருந்து கொண்டுவந்த வீடியோபடமோ, கடையிலிருந்து படம் வாடகைக்கு எடுத்தோ பார்க்கலாம்.

பிற்பகலில் வீட்டின் பெரிய அறையில் 2 மேசைடென்னிஸ், 1 பில்லியாட் மேசைகளை பயன்படுத்தலாம்.

இரவல் வாங்குதல் - வேலைத்தளம் - விழாக்கள் - வரவேற்புகள்.

வீட்டில் பல பொருட்கள் இரவல் வாங்கலாம். இவை அங்கேயே அல்லது சொந்த வீட்டிலோ பாவிக்க வாங்கலாம். தட்டெழுத்து இயந்திரம், தையல் இயந்திரம், துளை போடும் கருவி, வேலை ஆயுதங்கள், ஏணி, நாற்காலிகள் - சிறிய வைபவங்களுக்கு போதுமான அளவு - இரவல் வாங்கலாம். வீட்டின் அடித்தளத்திலுள்ள சைக்கிள் வேலைத்தளத்தில் ஒருவர் தனது சைக்கிளையோ தளவாடங்களையோ பழுது பார்க்கலாம்.

www.tamilarangam.net



கலாச்சார வீடு

டென்மார்க்ஸ்கேத 10 கொல்ஸ்டபுரோ.

கழகங்கள் ஒழுங்குசெய்யும் பெரும் விழாக்கள் வழக்கமாக வீட்டிலுள்ள பெரிய கூடத்தில் நடைபெற்றாலும், தனி விழாக்களுக்கும் வரவேற்புக்களுக்கும் இக்கூடத்தை பயன்படுத்தலாம். இங்கு மேசை, நாற்காலி, கோப்பிக்கோப்பைகள் சுமார் 150 பேருக்கு போதுமானதாக உள்ளது.

பாடத்திட்டம் - கல்வி - 'சுல் இ ஸ்கோட்டன'

லெபனான், குர்டிஸ்தான், சிறீ லங்கா விலிருந்து 18 பெண்களுக்கு 3 ஆசிரியர்கள் படிப்பிப்பதில் ஈடுபட்டுள்ளார்கள். பூடில் லவுஸ்டால் தினமும் டேனிஷ் படிப்பிக்கிறார். பெட்ட பீட்டர்சன் தையல் வேலை படிப்பிக்கிறார். பெர்னில் க்ரோ தயாரிப்பிலும் தனி அச்சிடுவதிலும் போதிக்கின்றார்.

பாடத்திட்டம் - கல்வி - 'வேறிலிருந்து சங்கீதம்'

ஏனைய 12 பேர், தமிழர், பாலஸ்தீனியர்கள், குர்தர், டேனிஷ்காரர் எல்லோரும் ஒருவரையொருவர் படிப்பித்துக் கொள்கிறார்கள். இங்றித் வால் அவர்களின் தலைமையின்கீழ் வெளி ஆசிரியர்கள் சங்கீதம், பாட்டு, நடனம் பற்றி ஒவ்வொருநாளும் படிப்பிப்பார்கள். மேலும், டேனிஷ் மொழியில் கற்பிக்க உறல்லா சொரன்சன் இருக்கிறார்.

தமிழ் நடனம்

ஒவ்வொரு திங்களும், புதனும் சிறிய பெரிய தமிழ் டேனிஷ் மாணவர்களுக்கு திருமதி தியாகேஸ்வரி வசந்தகுமார் அவர்களால் பாரம்பரிய தமிழ் நடனம் கற்பிக்கப்படுகிறது.
1990 ம் ஆண்டு இவர் 'இவ்வருடத்தின் அகதி கலைஞர்' என்று கௌரவிக்கப்பட்டுள்ளார்.

அன்ருட தலைமை-ஆலோசனை-வீட்டுக்கூட்டங்கள்- வெளி விருந்தாளிகள்.

ப்ரேபன் க்ரா னிலுல் இயங்கும் அன்ருட தலைமை வீட்டின் பாவனையாளர்களுக்கும் சங்கங்களுக்கும் தனது ஆலோசனையும் நடைமுறை, தனிப்பட்ட பிரச்சினைகளை தீர்க்க உதவுவார்.
புதிய நடவடிக்கைகள்பற்றிய யோசனைகள் எப்பொழுதும் வரவேற்கப்படும். இந்த யோசனைகளை ஒவ்வொரு வியாழனும் நடக்கும் வீட்டுக் கூட்டத்தில் விவாதிக்கப்படும். இக்கூட்டங்களில் சங்கங்களின் குழு அங்கத்தவர்களும், ஆசிரியர்களும், பணிபுரிபவர்களும் கலந்துகொள்வார்கள்.
பள்ளிகள், ஸ்தாபனங்கள், தனிப்பட்ட குழுக்கள், நபர்கள் அகியவர்கள் இடத்தை சுற்றிப்பார்க்கலாம். இவை வரவேற்கப்படுகிறது. ஏற்கனவே இதுபற்றி ஏற்பாடு செய்திருந்தால் வீட்டு சங்கங்களுடனே மொழிப்பிரிவுடனே வழக்கமான பாவனையாளர்களுடனே விசேஷ நிகழ்ச்சிகள் ஏற்பாடுசெய்யலாம்.

தொலைபேசி - குபே அலாவுதீன், யூலிக் குடை 97 411975

கலாச்சார வீடு 97 403197

இதன்மூலம் ப்ரேபன் க்ரா ஸெ, சுல் இ ஸ்கோட்டன, வேறிலிருந்து சங்கீதம் தொடர்பு கொள்ளலாம். 1.11.90 அன்று கலாச்சார வீடு 3 ஆண்டுநிறைகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(29ம் பக்: தொடர்ச்சி.)

அந்த இடங்களில் மீன்பிடித்தொழில் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. வேறு தொழிலாளர்கள் ஏதோ முடிந்தவற்றைச் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

கேள்வி:- வட பகுதியில் நாளுக்கு நாள் பொருட்களின் விலை ஏறிக்கொண்டிருக்கிறது. கிழக்குப் பகுதிகளில் விலையேற்றம் என்னமாதிரியுள்ளது.

பதில்:- கொழும்பில் இருக்கின்ற விலை மாதிரித்தான் கிழக்குப் பகுதிகளிலும், ஆனால் பொருட்கள் தாரளமாக கொள்வனவு செய்ய முடியவில்லை, தட்டுப்பாடாயுள்ளது.

கேள்வி:- தற்போது இங்கிருந்து தமிழ் டெனிஸ் நட்புறவுச் சங்கங்கள் மூலமும், வேறு வேறு உதவி நிறுவனங்கள் மூலம் அனுப்பப்படும் பணம் உரிய இடங்களுக்குப் போய்ச் சேருகின்றதா?

பதில்:- சரியான வழியில் போய்ச் சேருகின்றது என்று நான் சொல்ல முடியும். குறிப்பாக "NødHjælp" மூலம் அனுப்பப்படும் பணம் முதலில் இந்தியாவிலுள்ள ஒரு தேவாலயத்திற்கு அனுப்பி அங்கிருந்து இலங்கை அகதிகளுக்கு கிடைக்கக் கூடிய வகையில் ஆவன செய்யப்படுகின்றது. நீங்கள் எதுவித தயக்கமுமின்றி "மக்கள் தேவாலய அவசர நிதி" என்ற நிறுவனமூலம் அனுப்பலாம்.

கேள்வி:- தமிழர்கள் தங்களுடைய பிரச்சினைக்காக சரியான வழியில் போராடுகின்றார்கள் என்று கருதுகின்றீர்களா?

பதில்:- தமிழர்களோ அரசாங்கத்தினரோ சரியான வழியில் போராடுகின்றார்கள் என்று நான் சொல்ல முடியாது. ஆனால் தமிழ் மக்களுக்கு உள்ள பிரச்சினைகளை

www.tamilarangam.net



மறுக்க முடியாது. தற்போது ஏற்பட்டிருக்கின்ற தமிழ்-முஸ்லீம் கலவரங்கள் கூட அரசாங்கத்தினரால் ஏற்படுத்தியிருக்கின்ற சதிமுயற்சி தான்.

கேள்வி:- இந்தப் பிரச்சினைகளை எப்படித் தீர்க்கலாம் என்று நீங்கள் கருதுகின்றீர்கள்.

பதில்:- இதற்கான சரியான தீர்க்கமான முடிவை தற்போது தெளிவாகச் சொல்ல முடியாது. ஆனால் முதலில் இலங்கைக்கு உதவிபுரியும் வெளிநாடுகள் உதவிகளை நிறுத்துவதன் மூலமும் ஒருசில மாநிலங்களையாவது தமிழர்களுக்கு கொடுப்பதால் ஓரளவு சமாளிக்கலாம் என நான் கருதுகின்றேன்.

கேள்வி:- இந்தமாதிரியான நிலைக்கு உங்களைப் போன்றவர்களின் பங்களிப்பு, செயற்பாடுகள் என்ன?

பதில்:- நான் அங்கிருந்து இங்கு வந்த காலங்களில் மத்திய கிழக்கு நாட்டுப் பிரச்சினைகள் இங்கு அதிகமாகப் பேசப்படுவதால் நாம் பெரிதாக ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டது. இருந்தாலும் சில சில பத்திரிகைகளில் சிலவற்றை எழுதியிருக்கின்றேன். இனிமேலும் எழுதுவேன். எங்களைப் போன்றவர்கள் மட்டுமல்ல இங்கு தமிழ் டெனிஸ் நட்புறவுச் சங்கங்களும், வேறு தமிழ்ச் சங்கங்கள் நிறுவனங்களும் பிரச்சாரம் செய்ய முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கேள்வி:- உங்கள் இலங்கை அனுபவத்தில் மறக்க முடியாத சம்பவங்கள் ஏதாவது சொல்லமுடியுமா?

பதில்:- நான் பயணம் கொண்ட மூன்று நாட்களுமே எனக்கு மறக்கமுடியாத அனுபவங்கள் தான்.

- முற்றும் -

www.tamilarangam.net



Nødhjælpsindsamling til Nord- og Øst Sri Lanka:

VI HAR BRUG FOR DIN HJÆLP

Sammenslutningen af Tamilsk-Danske Foreninger startede i december en indsamling af penge til nødhjælp til Sri Lanka. Indsamlingen foregår i samarbejde med Folkekirkens Nødhjælp, og alle pengene går til at hjælpe de mennesker, som er ramt af borgerkrigen i Nord- og Øst Sri Lanka.

Den 15. februar var der indbetalt 17.000 kr. til indsamlingen, men der er kun kommet penge ind på ca. 60 girokort ud af de ca. 1300, som vi har sendt ud med Chanchive og fordelt til de forskellige lokale foreninger.

Vi opfordrer derfor alle, som vil støtte indsamlingen, til hurtigt at bruge et af girokortene og sende et beløb, lille eller stort. Man kan udmærket sende 20 kr. eller 50 kr. eller mere, men det gælder bare om at få nogle indbetalinger hurtigt ind. Man skal endelig ikke vente med at sende pengene til et større beløb er samlet sammen. Det gælder bare om at få alle bidrag afsted. Der er hårdt brug for pengene på Sri Lanka.


- PER DOGBJER - HOLS.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## குறுக்கெழுத்துப் போட்டி: 12



சஞ்சீவியின் குறுக்கெழுத்துப் போட்டி இல: 13. நீங்கள் யாவரும் போட்டிக்குத் தயாராகியிருப்பீர்கள் என நம்புகிறேன். நீங்கள் முன்னைய போட்டித்தாள்களை நிரப்பியது போலவே இதனையும் முனையுங்கள். போட்டித்தாளை நிரப்புவதற்கு உதவியாக கேள்விகளும், விதிகளும் கீழே தரப்பட்டுள்ளன.

கேள்விகள்:- இடமிருந்து வலம்:

1.13: இரத்தினக்கல் இருக்கும் இடத்தினை தோண்டு முன்பும், சில வகையான மத வைபவங்களின் போதும், உயிர்களை இப்படிக் கொடுக்க கொலை செய்வர். இது தற்போது பெரிதும் தடை செய்யப்பட்டுள்ளது.

6.8: வெப்பம் ஏற்றும் போது திரவமாகும் இதனை, பெருந்தெருக்கள், சிறு வீதிகள் அமைப்பதற்கு பாவிப்பர். இது கறுப்பு நிறமாகவிருக்கும்.

7.46: வேலை செய்தவர் இதனைப் பெறும் போதே களைப்பு தீருமென்பர்.

10.30: குற்றம் செய்தோருக்கு, நீதிமன்றம் குற்றத்தைப் பொறுத்து இதனைச் செலுத்தும்படியும் பணிக்கும்.

18.5: பலம் பொருந்திய ஒரு பெண்ணை இப்படியும் அழைப்பர்.

21.45: கடற்கரையில் அடையும் சில வகையான இ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**போட்டியின் விபரங்களும், நிபந்தனைகளும்:**

1. சஞ்சீவியின் ஆசிரியர்கள் தவிர்ந்த யாவரும் பங்கு கொள்ளலாம்.
2. போட்டியில் பங்குகொள்வோர் கட்டங்கள் அனைத்தையும், சரியான முகவரியினையும் தெளிவாக எழுதி இதழின் இறுதிப் பக்கத்தில் உள்ள கட்ட அஞ்சல்பத்திரத்தை பூர்த்தி செய்து »10.04.91.« க்கு முன்னதாக சஞ்சீவிக்கு அனுப்பிவைத்தல். (முகவரி அஞ்சற்பத்தில் உள்ளது)
3. இதழின் அசல் பிரதியே ஏற்றுக்கொள்ளப்படும்.
4. போட்டி முடிவுகள் சஞ்சீவியின் நடுவர் குழுவினால் தெரிவாதல். மேற்கண்ட விதிமுறைகளுக்கமையவும், சரியாகவும், தெளிவாகவும் பூர்த்தி செய்யப்பட்ட போட்டிக் கூப்பன்கள் சீட்டிழுப்பு மூலம் 1, 2, 3 ம் பரிசுகளுக்கான தகுதியினைப் பெறும்.
5. போட்டி சம்பந்தமான நடுவரின் தீர்ப்பே இறுதியானது.
6. சரியான விடைகளும், பரிசில்கள் பெற்றவர்களின் விபரங்களும், அடுத்து வரும் இதழில் வெளியாகும். பரிசில்கள் உரியவர்களுக்கு காலக்கிரமத்தில் அனுப்பிவைக்கப்படும்.

மிகவும் விலையுயர்வானது. இதனை பதப்படுத்தி பவுண், தங்கபஸ்பத்துடனும் கலப்பர்.

24.11: சிலருக்கு பெயராக இருக்கும் இது, எல்லோருக்கும் பழகும் தன்மையாக இருப்பின் யாவரும் நல்லவர்களாகவே தோன்றுவர்.

28.15: நெற்பயிர் செய்வோரை, இது செய்வோரென்பர்.

31.48: வியாபாரிகள் இதனை முக்கிய இலக்காகக் கொள்வர். இது குழம்பியுள்ளது.

-37-: இறைவன், அரசன் என்போரை ஒரு எழுத்தில் இப்படியும் அழைப்பர்.

41.51: மரவேலைகள் செய்யப் பயன்படும் ஓர் வகை கூரிய ஆயுதம் இதுவாகும்.

49.43: இது 'சில'வின் எதிர்ச்சொல்.

52.39: தாவரத்தில் இலைகள் முறிந்தாலோ, கத்தியின் கூரிய பகுதி உடைந்தாலோ, 'இப்படி' எனக் கூறுவர்.

www.tamilarangam.net



## கேள்விகள் :- மேலிருந்து கீழ்:

1. 2: இலங்கையில் உள்நாட்டு யுத்தம், உணவுத் தட்டுப்பாட்டால் கூடுதலாக வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இது ஏற்பட்டுள்ளது
7. 5: வேலை வெட்டியின்றி, வீட்டுக்கும் வெளியவர்களுக்கும் உதவாமல், வீணே செலவு செய்து கொண்டிருப்பவனை இப்படியும் கூறுவர்.
7. 11: ஒருவர் தனக்கிட்ட பெயரை மாற்றம் செய்தாலோ, அல்லது ஒருவருக்கு மேற்பட்டோரின் பிரச்சனை, தீர்வுகளை மாற்றவும் அறிய மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் '—' செய்வர்.
18.15: நிறம், சாயம் என்பவற்றைக் குறிக்கும் இது, இலையின் பெயராகவும் உள்ளது.
21.20: '—' பகலவன் முதலே உலகாம்.
33.30: சிலர் இந்தச் சொல்லைக் கூறி, தன்னில் பலிக்காதென்பர். ஆனால் இது சாபமல்ல.
23.26: அரசமுடி, கிரீடம் போல் இதுவொன்று. ஆனால் குழம்பல்.
33.35: இலங்கையின் வடக்கு-கிழக்கு மக்களுக்கு இது அதிகமாக உள்ளது. இதனால் உளவியல் ரீதியான வருத்தங்கள் உருவாகலாம். இது குழம்பியுள்ளது.

46.43: மனிதனின் இறுதிப்பாதுகாப்பான இதனை இலங்கையின் வடக்கு- கிழக்கு வாழ் அதிகமக்கள் இழந்துள்ளனர். இது குழம்பியுள்ளது.
49.48: தோற்பந்து முட்களாகத் தோன்றும், இனிமையான பெரிய பழத்தின் தாய் மரம் இதுவே.
52.51: ஒலியை விட, இதன் வேகம் கூடியது.

வருடத்துக்கு 365 நாட்கள் தானே? ஆனால் கி.மு-47ம் ஆண்டுக்கு மட்டும் அப்படியல்ல. ஜூலியஸ்சீசர் என்ற ரோமானிய மன்னனின் ஆணைப்படி இந்த வருடத்துக்கு 445 நாட்களாகக் கணக்கிடப்பட்டது.

www.tamilarangam.net



இதழ் இல:11ல் வெளியிடப்பட்ட கு. போ. இல:10ன் விடைகளும், பரிசில்கள் பெறுவோரும்:-

**விடைகள்:- இட. வலம்:**

4. 23: கன்னம்
5. 31: வணக்கம்
6. 19: தவம்
7. 46: ஆயுதம்
13. 1: புவி
15. 12: முளை
16. 29: அம்மா
- 26 - : தீ
32. 34: மலை
39. 52: கன்னி
41. 28: யடம்
44. 48: பார்
49. 36: பூண்டு
50. 42: அடி

**விடைகள்:- மேல். கீழ்:**


7. 4: ஆதவன்
7. 10: ஆதவனம்
13. 12: புகை
15. 19: அழுக்கம்
22. 24: கனம்
29. 28: மாம்
33. 31: மதம்
33. 34: தலை
39. 38: கட
44. 40: பாண்டியன்
50. 46: அபூர்வம்

-1-

K. VIJAYAN
VIBORGGYDE 28
9500 HOBRO.

-2-

J. DARSHANA
DOLLERUPPARKEN 32
6640 LUNDERSKOV.



-3-

P. SUBARANJINI
SKRÆNTEN - 11
6940 LEM.

பிரான்ஸ் நாட்டில், குளிக்கும் போது படிப்பதற்காக இறப்பர்த்தாளில் ஒரு பத்திரிகையை பல வருடங்களாக அச்சிட்டு வெளியிட்டுக் கொண்டிருந்தார்களாம்.

www.tamilarangam.net



இதழ் 8,12ல் வெளியிடப்பட்ட கு.போ. இல:11ன் விடைகளும், பரிசில்கள் - பெறுவோரும்:-

**விடைகள்:- இட-வலம்:**


1.13: கரி
4.43: தேடும் படலம்
6.21: வங்கம்
7.35: பதாகை
12.15: பனை
22.5: பூக்கீரை
29.24: டாம்
42.50: கனி
48.35: கிளை
51.28: கங்காரு
52.26: அதிர்ச்சி

**விடைகள்:- மேல்-கீழ்:**

7.8: வரைபடம்
7.10: பங்கீடு
12.13: பரி
20.17: தாக்கம்
20.24: தாம்பூலம்
27.30: திருடாதே
36.30: படுக்கை
38.39: கார்
40.44: சிங்களம்
47.48: கிலி
52.50: அகனி

-1-
T. YOGARASAH
ENGOLMVEJ 35 ST.TH
6880 TARM.

-2-
K. PADMANATHAN
CENTRUMGÅRDEN 39
8870 LANGÅ.



போட்டியில் வெற்றியீட்டியோருக்கும், கலந்து கொண்டோருக்கும் சஞ்சீவி சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம். பரிசில்களுக்குரியவர்களுக்கான காசுக்கட்டளைகள் உரிய காலத்தில் சஞ்சீவியால் அனுப்பிவைக்கப்படும்.

கு.போ. சார்பாக: எம் சி. லோகா.

செங்கடலில் (றெட் ஸீ) நீர் சிவப்பாக இருக்காது. எடோம் என்ற மலையின் நிழல் இதில் தெரிகிறது. ஹீப்ரு மொழியில் எடோம் என்றால் சிவப்பு (றெட்) என்று பொருள்.

ஆகவே பின்னால் இதை செங்கடல் என்று தவறாக அழைக்கலானார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# சிறுவர் அரங்கம்.

சிறார்களின் சிந்தனைக்கு!

1. அமெரிக்காவின் சுதந்திரச் சிலையின் மொத்த நிறை எவ்வளவு
2. உலகிலேயே முதற் பெண் டாக்டர் (வைத்தியர்) யார்?
3. உலகமாவீரன் என அழைக்கப்பட்ட நெப்போலியன் எத்தனையாம் ஆண்டு காலமானான்.
4. கொம்பியூட்டரை கண்டுபிடித்த விஞ்ஞானி யார்?
5. சிகரெட் பிடிக்கும் பழக்கத்தை உலகத்திற்கு அறிமுகம் செய்த நாடு எது?
6. பொதுமக்களுக்கான பஸ் சேவையை எந்த நாடு? எப்போது? யாரால்? ஆரம்பிக்கப்பட்டது.
7. டென்மார்க்கின் தேசிய பறவை எது?
8. ஒரு தொன் எத்தனை கிலோ?
9. ஹே. சி. அண்டர்சன் (H.C Andersen) எத்தனையாம் ஆண்டு பிறந்தார்.
10. ரஷ்யநாட்டுப் பணத்தை என்ன பெயர் கொண்டு அழைப்பர்?

பதில்கள் பக்கம்: 51

தெருக்களுக்குப் பெயரோ, வீடுகளுக்கு இலக்கமோ இல்லாதஒர் நகரம் இருந்தது தெரியுமா? துருக்கி தேசத்தில் உள்ள கான்ஸ்டான்டி நோபிள் நகரந்தான் இத்தகைய சிறப்புப் பெற்றது. இந்த நகரம் தோன்றி 1600 ஆண்டுகள் வரை இங்குள்ள தெருக்களுக்குப் பெயரோ, வீடுகளுக்கு இலக்கமோ இடப்படவில்லை. 1916 க்கு பிறகு தான் தெருக்கள் பெயர் பெற்றன, வீடுகள் எண்ணைப் பெற்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புதுமைகள் + புதுமனிதர் = 0

புதுமைகளை எண்ணி(ப்)
புருவங்களை நெளித்துக் கொண்டேன்.
புதியவை எனக்கு(ப்)
புதிராக இருக்க வில்லை

பழமையின் பாதிப்பை(ப்)
புதுமைகள் துடிப்புடனே எதிர்த்து நிற்கின்றது.
ஆனால்
புதுமைகள் வயதில் குறைந்தவைகள்.

புதுமைகளை எண்ணி(ப்)
புருவங்களை நெளித்துக் கொண்டேன்!

பூக்கள் பூக்கும் போது அதன் வாசம்
புதியது (தான்)
பூவுலகு அசுத்தம் ஆவதனால்
பூவின் வாசம் நிலைப்பதில்லை!

"பூவின் வாசம்" பற்றி "பேசவும்"
பூவுலகில் புதுமனிதர் இருக்கின்றார்!
"பூவுலகின் அசுத்தம்" பற்றி "பேசவும்"
பூவுலகில் புதுமனிதன் இருக்கின்றான்!!

புரிந்துணர்வுதான் "இந்தப்"
புதுமனிதர்களிடம் இல்லை.

புருவங்களை நெளித்துக் கொண்டு
புதுமைகளை மீண்டும் ஒருதரம் நினைக்கின்றேன்.

-: வளவன் :-

www.tamilarangam.net



சாம்பு மாமா மட்டும் அந்தத் தமிழ்க் குடும்பத்துக்கு போட்டு வாறன் சொல்லி விடைபெற்றுக் கொண்டார்.

"என்ன சிவநாயகம்... உங்கடை சிற்றியிலே இருக்கிற அந்தச் சனத்தை தெரியாதது போல வாறாய்"

"இல்லை மாமா.... ஆகத் தமிழ்ச் சனங்களோடு பழகி-னால் பிரச்சினை என்று அவ்வளவாக ஒருத்தரும் பழகிறதில்லை."

இப்ப மட்டும் பிரச்சினை வராமல் இருந்திட்டுதோ" என சாம்புமாமாவுக்கு கேட்க வேணும் போலிருந்தது. ஆனால் வீடு போய் முதலில் நிலைமையை அறிவோம், எனப் பேசா-மல் போய் காரில் ஏறினார்.

★

"நல்ல பெரிய வீடப்பா" எனக் கூறிக் கொண்டு காரில் இருந்து இறங்கினார். "ஆனால் அவ்வளவு வாடகையில்லை. இதுவும் அந்தக் கொன்ராக் பமிலியின்ரை வீடுதான்."

»அந்தக் கொன்ராக் பமிலியின்ரை வீடுதான்« எனச் சிவநாயகம் கூறிய போது அவரது தலை தானாகவே குனிந்து கொண்டது.

"வாங்கோ மாமா" பரிமளம் கதவைத் திறந்து கொண்டு

ஒருவர்:- என்ன ஒரே அலட்டலும், அறுவையுமாகவும் இருந்தி-ருக்குமே நேற்று, ஆள் வந்தவர் வழியில்.......

இரண்டாம்:- இல்லையப்பா எனக்கு அந்த மனிசன் சொல்லுறது விளங்கவில்லை அதுதான் உண்மை, அலட்டல் என்று எப்படிச் சொல்வது!



ஒருவர்:- அதுதான் விளங்காத விசயங்களை அறுவை அல்லது அலட்டல் என்று சொல்லுறது!!!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வந்தாள்.

பரிமளம் உருவத்தில் நன்கு மாறியிருந்தாள். நன்றாக உப்பி, தலையெல்லாம் கிறில் செய்து அளவுக்கதிகமான நகைகளோடு மொத்தத்தில் இரண்டு நாட்டு வடிவும் இல்லாது ஓர் புதுவிதமான தோற்றத்தில் நின்றிருந்தாள்.

சாம்பு மாமாவிடம் தோள்பையை பரிமளம் வாங்கிக் கொள்ள மூவரும் போய் ஹோலில் அமர்ந்து கொண்டார்கள்

ஓர் டெனிஸ் வீடே தோற்று விடுமாய்ப் போல வீடு அழகுபடுத்தப்பட்டிருந்தது. அது அது இருக்க வேண்டிய இடத்தில் அழகாகத் தான் இருந்தது. சாம்பு மாமா ரசித்துக் கொண்டிருந்தாரே தவிர தாய் தகப்பனே தொடாங்கட்டும் என்பது போலவே பேசாமல் இருந்தார்.

ஆனால் யார் முதலில் தொடங்குவது என்ற தயக்கம் சிவநாயகத்துக்கும் பரிமளத்துக்கும் கூட இருந்தது. வினாடிகள் நிமிடங்களாக அவர்களின் தயக்கத்தை புரிந்து கொண்ட சாம்பு மாமா "பிள்ளை எங்கே" என அடியெடுத்தார்.

"இப்ப வந்திடுவன் மாமா---- நீங்கள் தான் பக்குவமாய் எடுத்துச் சொல்ல வேணும், உங்கள் ஒரு ஆளிலை தான் அவன் சரியான மரியாதை வைத்திருக்கின்றான்." பரிமளம் மன்றாடுவது போல கூறினாள்.

"அவனுக்கு தாய் கதைக்க ஏலாமல் கிடக்கு" பாஞ்சு விடுகிறான். நேருக்கு நேராய் வாய்காட்டுகின்றான்" இது சிவ நாயகம்.

இப்ப என்ன ரஞ்சினியோடை கதைக்கிறது, செய்கிறது என்டதுக்கு முதல் உண்மையில் என்ன நடந்தது

www.tamilarangam.net



என்று சொல்லுங்கோ, பிறகு பார்ப்பம்," சாம்பு மாமா செற்றியில் நன்கு சாய்ந்து கொண்டார். பரிமளம் தான் சொல்லத் தொடங்கினாள்.

"என்னத்தைப் பெரிசாய் சொல்லுறது மாமா... வந்த காலத்திலே இப்ப ரஞ்சனியை செய்யப் போறான் என்று சொல்லுறது பெடியன்ரை குடும்பம் தான் எங்கடை கொன்றாங் பமிலி. தாய், தகப்பன், இந்தப் பொடியன் தங்கச்சியார். தங்கச்சியார் பெட்டை தான் இவளோடை நல்ல ஒட்டு. சனி ஞாயிறுகளில் வந்து விளையாடும். சில வேளை இங்கேயே படுக்கும், சில வேளை ரஞ்சனியையும் சுரேசையும் தங்களோடை கூட்டிப் போய் விளையாடும். பிள்ளையள் தானே பாசையும் படிச்சு நல்ல டெனிஸ் பழக்கவழக்கங்களையும் படிக்கட்டும் என விட்டனாங்கள். அது இப்ப இப்படி வந்திருக்கு மாமா."

பரிமளம் சொல்லிக் கொண்டிருக்க சிவநாயகம் தேனீர் கலந்து வந்து சாம்பு மாமாவுக்கும், பரிமளத்துக்கும் கொடுத்து தானும் குடித்துக் கொண்டு தானாகவே தொடர்ந்தார்.

"எனக்கு அவள் சாமத்தியப்பட்ட பிறகு விட அவ்வளவு விருப்பமில்லைத் தான் ஆனால் அதுகளும் இந்த வீட்டுக்கை ஒருகெ அடைஞ்சு இருக்கிறதோ என்றபடியும் தான், அந்தப் பொடியனும் சில வேளை பாடங்கள் சொல்லிக் குடுக்கிறது என்றபடியும் தான் விட்டனாங்கள்".

பரிமளம் முடிச்சுப் பார்க்க சிவநாயகம் மௌனமானார். சாம்பு மாமா சாடையாக கவனித்துக் கொண்டார்.

"அப்ப பிள்ளையள் தெரியாமல் தான் கேட்கிறன், இஞ்சை இருக்கிற மற்ற தமிழ் ஆட்களின்ரை பிள்ளையளும் இப்படித் தானோ"

www.tamilarangam.net






"ம்.... அவ்வளவு சனத்துக்கு கொன்ராக்டமிலியன் கிடையாது. டெனிஸ்காரர் என்டாப் போலே எல்லாரோடையும் சேருறாங்கள். எங்களைப் போல கொஞ்சம் உசன்ரான சனங்களோடு தான் அதுகளும் பழகுதுகள். இஞ்சை இருக்கின்ற தமிழ்ச் சனங்கள் அவ்வளவு டெனிஸ் தெரியாதுகள்.... இனி ஊரிலே முன் பின் தெரியாத சனங்களோடை என்னத்தைப் படிக்கிறதுகள் என்றிட்டு நாங்களும் அவ்வளவு பழகுறதில்லை. நாலுநாளைக்கு பழகுங்கள் பிறகு முன்னைமாதிரி நீண்டுக் கொண்டு திரியுங்கள். ஒன்டோடை ஒன்டு றோட்டிலே நின்டு சண்டை பிடிக்குதுகள் அதாலே தான் நாங்கள் ஒதுங்கியிருக்கிறது. அது படியாலே அந்தக் குடும்பங்களிலே என்ன கூத்து நடக்குது என்டு தெரியாது. ஆனால் மாமா! நாங்கள் நல்லாய் டெனிஸ்க்காரரோடை பழகினனென்டு எல்லாச் சனத்துக்கும் பொறாமை மாமா! இந்த ரஞ்சனி விடயம் மட்டும் தெரிந்தால் காறித் துப்புங்கள் அதுக்குத்தான் பயப்பிடுகிறன்." பரிமளத்தின் பலவீனமான குழப்பங்களும் வார்த்தை என்ற வடிவத்தில் வெளியே கொட்டிக் கொண்டிருந்தது.

சாம்பு மாமா கண்ணை மூடிக்கொண்டு தியானத்தில் கேட்டுக் கொண்டு இருப்பது போல இருந்தார். இடைக்கிடை ஊம் கொட்டினார். பின் தொடர்ந்து யோசித்துக் கொண்டிருந்தார்.

சிவநாயகமும், பரிமளமும் சாம்பு என்ன சொல்லப் போறார்

— தொடரும் —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இடைவெளி

"காலங்களும் கருத்தோட்டமும்" தொடர் நவீனத்தின் 1ம் பாகம் மூலம்.

பள்ளியறைக் கருவில் இருந்து
பள்ளிக்கூட கதவுவரை

உங்கள் பாலகர்களை என்னுடன் அழைத்துச் சென்றிருந்தேன்.

குயிலியின் குரல்வழி கூவியதும்
சஞ்சீவியில் தவழ்ந்து வந்ததும்
ஒரே குழந்தைதான் என்றாலும்
பெற்றோராகிய உங்கள் மார்புகளில்
அது இருதடவை தவழ்ந்தது
இருவருக்குமே ஆரோக்கியமானதாகும்.

அடுத்த மலர் முதல்
அவர்களுக்கு வெளியுலகத்தின் வேடிக்கைகளை
வேஷங்களை
வேதனைகளை
காட்டுவதற்கு விழைகின்றேன்.

என் இனிய குழந்தைகளே!
விழித்தெழுங்கள்
எம் இனிய பெற்றோரே!!
எம்மை விழிக்க விடுங்கள்.

மீண்டும் சந்திக்கும் வரை
- சீரா -

www.tamilarangam.net



(7ம் பக்: தொடர்ச்சி)

இராணுவ இருப்புக்களையும் பொருளாதார இருப்புக்களையும் அடைக்கும். வியட்னாம் போரில் இழந்த அமெரிக்கா இராணுவத்தினரின் பெயர்கள் பொறிக்கப்பட்ட கறுப்புப் பளிங்குக் கல்லிலான நினைவுச் சின்னம் ஒன்று அமெரிக்காவில் இப்போதும் உண்டு. வளைகுடா யுத்தத்திற்காக அமெரிக்கா இராணுவத்தினை அனுப்பிய போது அமெரிக்க மக்கள் (கறுப்பு - வெள்ளை) அந்த நினைவுச் சின்னத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் நடாத்தியது இன்னொரு இழப்பினை மக்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்பதை வெளிக்காட்டியுள்ளது.

முதன் முதலாக அணுகுண்டினை பாவித்து ஜப்பானிலுள்ள நகரங்களையும் மக்களையும் முற்றாக அழித்த பெருமை அமெரிக்காவிற்கே உண்டு. இன்று கூட அங்கு பிறக்கும் குழந்தைகள் அங்கவீனமாகப் பிறப்பது குறிப்பிடத்தக்கது. இதை விட இன்னும் பல நாடுகளின் மீது (கிரனடா, டொமினிக்கா குடியரசு, கொரியா, பனாமா, கொலம்பியா, நிக்கரகுவா) அமெரிக்கா தனது அக்கிரமத்தினைச் செலுத்தி பல மனித இழப்புக்களையும் சேதங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

www.tamilarangam.net



எல்லோரும் எதிர்பார்த்தது போல் அமெரிக்கத் தரப்பில் பெரிய அளவில் மனித இழப்புக்கள் ஏற்படவில்லை. இது வியட்னாம் கொரிய ஆக்கிரமிப்புக்களில் அமெரிக்கா கற்றுக் கொண்ட பாடத்தினையே வெளிப்படுத்துகின்றது. அன்றைய யுத்தத்தில் இராணுவத்தில் பணிபுரிந்த நோமன் சுவார்ச் கோப் (Norman Schwarzkopf) என்பவர் இன்று இந்த வளைகுடா யுத்தத்தில் ஜெனரலாகப் பதவி வகிப்பது குறிப்பிடத்தக்கது. ஈராக், குவைத் தரப்பில் ஆயிரக் கணக்கான மனித இழப்புக்களையும், பெரிய அளவிலான பொருளாதாரப் பாதிப்பினையும் ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் அமெரிக்காவும் பொருளாதார ரீதியில் பெரியதொரு இழப்பினை அடைந்து கொண்டுள்ளது. ஆயினும் பெரியளவில் பாதிக்கப்பட்டது ஈராக்கும், குவைத்துமாகும்.

ஈராக்கின் இந்த ஆக்கிரமிப்பின் போது குவைத்தில் பல குவைத் மக்களும், வெளிநாட்டவர்களும் கொல்லப்பட்டதுடன் பாலியல் வன்முறைக்கும் உள்ளாக்கப்பட்டார்கள். அத்துடன் குவைத் சொத்துக்கள் ஈராக்கினால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. குவைத்தில் எண்ணெய்க் கிணறுகள் குண்டு வைத்து தகர்க்கப்பட்டதும் எரிக்கப்பட்டதனதும் விளைவினால் பாரசீக வளைகுடா கடல் வளம் பாதிக்கப்பட்டதுடன் (8 C.ம கடலில் எண்ணெய் படிந்துள்ளது குறிப்பிடத்தக்கது) எண்ணெய்க் கிணறுகள் எரியுண்டதால் வளிமண்டலம் அசுத்தமடைந்துள்ளது. இதனால் உலக மக்களுக்குப் பெரியள

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விலான பாதிப்பு ஏற்படலாம். இது தவிர ஆசிய ஆபிரிக்க நாடுகளுக்கு எண்ணெய் விலை பெரியளவில் அதிகரிக்கப்படலாம்.

அமெரிக்கா ஈராக் நிலைத் மீது பெரிய-அளவிலான பாரிய விமானத் தாக்குதலை நடாத்தியுள்ளது. இந்தத் தாக்குதலின் காரணமாக பல இலட்சம் தொன் வெடி மருந்தினை அமெரிக்கா பாவித்துள்ளது. இந்த நச்சுக்களின் பாதிப்பு ஈராக் நிலைத் மக்களுக்கேயாகும்.

ஆக்க வெற்றி கொண்ட அமெரிக்கா இன்று நேரடியாக குவைத் மீது தளம் அமைத்துக் கொள்ள சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்த பெருமை சதாம் ஹுசெயினையே சாரும். அத்துடன் ஹுசைனின் இஸ்ரேல் மீது தாக்குதல் நடாத்துவதன் மூலம் இந்த வளைகுடா யுத்தத்தினை இஸ்லாமிய, யூத யுத்தமாக மாற்றி அரபு நாடுகளை இந்த யுத்தத்தில் இறக்க மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்து விட்டது. அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் இஸ்ரேலுக்கு பல இராணுவத் தளபாடங்களை வழங்கிப் பாதுகாப்புக் கொடுத்ததுடன் இஸ்ரேலினை யுத்தத்தில் இறங்க விடாமல் தடுத்து வைத்திருந்தது. முன்னரை விட இப்போது இஸ்ரேல் மத்திய கிழக்கில் பலம் பொருந்திய நாடாக அமைவதற்கு சதாம் ஹுசைனின் நடவடிக்கை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

ஸ்ரீ சஞ்சீவி

www.tamilarangam.net



# ET BESØG I BATTICALOA

Den danske journalist Jørgen Harboe var i november 1990 på Sri Lanka, hvor han besøgte Batticaloa.( Han fik ikke tilladelse til at rejse til Jaffna-halvøen). Den 16. februar var han i Holstebro og Herning og fortælle om sine indtryk fra rejsen.

Han kørte med tog fra Colombo, hvor alt var fredeligt. Ved grænsen til den østlige provins kom soldater på toget, som fortsatte med 10 km. i timen, mens militæret undersøgte banen for miner. Toget standsede 30 km. fra Batticaloa. Den sidste strækning kørte kan i bil langs kysten gennem tomme landsbyer, hvor huse var bombet og lå og forfaldt. Markerne blev ikke dyrket. Han så kun en fisker ude i lagunen, som tidligere var fyldt med fiskere. I Batticaloa var mange flygtninge, og han besøgte to flygtningelejre. Han besøgte også en skole for forældreløse børn, som støttes af Folkekirkens Nødhjælp.

Jørgen Harboe sagde, at han hørte ikke mange skud, men frygt og terror gennemsyrede hele samfundet og gjorde et normelt liv i området umuligt. Der er hårdt brug for nødhjælp, men først og fremmest er der brug for fred, sagde Jørgen Harboe.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(40ம் பக்கத் தொடர்ச்சி)

சிறார்களின் சிந்தனைக்கான பதில்கள்.

1. 2225 தொன்.
2. "எலிசபெத் பிளாக் வெல்" 1849ம் ஆண்டு மருத்துவப் பட்டம் பெற்றார்.
3. 1821ம் ஆண்டு காலமானான்.
4. அமெரிக்காவைச் சேர்ந்த "ஹோவர்ட் அட்சென்" என்பவர் 1937ம் ஆண்டு இதனைக் கண்டுபிடித்தார்.
5. ஸ்பானிஷ் நாட்டவர்கள்.
6. பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த "பஸ்கால்" என்பவர் 1662ம் ஆண்டு ஆரம்பித்து வைத்தார்.
7. அன்னம்
8. 1000 கிலோ.
9. 1805ம் ஆண்டு.
10. ரூபிள் (Rupler) கொபெக் (kopek)

## பறவைகளே

ஆகாயத்தில் பறக்கும் பறவைகளே
ஆனந்தமாய் பறக்கும் பறவைகளே
இனிமையான பாட்டுப்பாடி எங்களை மகிழச்செய்யும் பறவைகளே
காலையில் எழும்பும் பொழுதும் உங்கள் குரல் இனிமையான
குரல் கேட்கிறது
மாலையில் உறங்கும் பொழுதும் உங்கள் குரல் கேட்கிறது
ஒரு தடையும் இல்லாமல் பறக்கிறீர்களே அது உங்களுக்கு
ஒரு அதிர்ஷ்டம் என்று நான் நினைக்கிறேன்.

பத்துவயது நிரம்பிய பத்மா தேவதாஸ் எழுதிய கவிதையே மேல் உள்ள 'பறவைகளே'. பத்மா தனது சொந்த முயற்சியின் மூலம் தட்டச்சு இயந்திரத்தில் எழுதி அனுப்பிவைத்துள்ளார். இக்கவிதையினைப் பிரசுரிப்பதில் நாம் சந்தோசமடையும் அதே வேளை, பத்மாவின் இந்த முயற்சி இங்குள்ள ஏனைய குழந்தைகளையும் இது போன்ற கவிதை, சிறுகதைகளை எமக்கு எழுதியனுப்ப உந்துதலாக அமையும் என நம்புகிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வெளிச்சத்தை நேசிக்காதவர்களிற்கு

வெளிச்சத்தை மறுப்பவர்களே!
அல்லது,
வெளிச்சத்தை நேசிக்காதவர்களே!

இருட்டில் இருந்து கொண்டு
உள்ளத்தையும்
இருளாக்கிக் கொண்டவர்களே!

வெள்ளை வேட்டிக்குள்
நச்சுவிதைகளை
ஒழித்து வைத்துள்ளவர்களே!

உலகைப்பாருங்கள்.
மக்கள் சமூகத்தைப்பாருங்கள்
நாற்றமெடுக்கும்
“சமூகவெறியை” விரட்டியடிக்க
தூய்மையான நீரில்
உங்களை
பல தடவை கழுவி எடுங்கள்.

இளம் சமுதாயம்
எட்டிப் பிடிக்க முடியாத் தூரத்தில்
வெளி வேறைத்து
சிரிப்பையும், பழக்கத்தையும்
மூட்டை கட்டி விடுங்கள்.
(அவர்களாவது வாழட்டும்)

மனித உணர்வுகளையும்
மனித நேயத்தையும்
மதிக்கப் பழகுங்கள்

www.tamilarangam.net



ஒன்றில் நீங்கள் மாறவேண்டும்
அல்லது,
மாற்றப்பட வேண்டும்!

-: அக்கினி புத்திரன் :-

## முகத்திலே சரித்திரக்கோலம்



ஆபிரிக்கா, அவுஸ்ரேலிய நாட்டு சுதேசிகள் முகத்திலும் உடலிலும் வர்ணப் பொடிகளால் கோலம் போட்டுக் கொள்வதைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் ஒரு பெண் தன் முகத்தில் தன் நாட்டின் சரித்திரத்தையே வரைகோடுகளால் கோலமிட்டிருக்கின்றாள். பராகுவே நாட்டில் வாழும் பாயா இனத்தைச் சேர்ந்தவள் இவள். இவள் முகத்தில் இடப்பட்டுள்ள கோடுகளும் கோலங்களும் அந்த இனத்தார் வெற்றிகண்ட யுத்தங்கள், பிரயாணங்கள் முக்கிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றைக் குறிப்பிடுவனவாகும்.

ஆதாரம்:- தெரிந்து கொள்ளுங்கள்

200 மில்லியன் வருடங்களாக ஒரு பிராணி தோற்றமும் மாறாமல் இன்னமும் அதன் சந்ததிகள் உலகில் இருக்கின்றன என்றால் வியப்பாக இல்லையா?
அது எந்தப் பிராணி தெரியுமா?
'ஆமை'.

www.tamilarangam.net



# SUS I SKØRTERNE

தையலையும் அச்சிடுதலையும் சேர்ந்த டெனிஷ் கல்வி-தொழிற்திட்டம்:

நல்வரவு:...

'எங்களிடம் வருகை தரவும் அல்லது உடைகள் வாங்கிச் செல்லவும் வகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் எத்தகையது?

இது அகதிகள், வெளிநாடுகளிலிருந்து இங்கு வந்து குடியேறிய பெண்களுக்கானது. இதில் துணியில் அச்சுப்பதித்தல், தையல், டெனிஷ் மொழிக் கல்வி என்பன கற்பிக்கப்படுகிறது. இது ஆவணி 89ம் ஆண்டு -9- பெண்களுடன் ஆரம்பிக்கப்பட்டு 90 ஆவணியில் -16- ஆக உயர்ந்துள்ளது. 5பேர் சென்றவருடம் படித்தவர்களும் -11- பேர் புதியவர்களுமாகும். 3 குருடிஸ்தானியரும், 5 பலஸ்தீனியரும் 8 தமிழரும் இதில் அடங்குவர்.

இங்கு ஒரு தொழிற்திட்டத் தலைவரும், ஒரு படம் வரை கலைஞரும், இரு ஆசிரியர்களும் கடமையாற்றுகின்றனர்.

இதற்கு சமூக சேவைத் திணைக்களத்திடமிருந்து உதவிகள் பெறப்படுகிறது. டெனிஷ் அகதிகள் உதவிச் சங்கம் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளது.

கல்வி:....

நாளாந்தம் 6 பாட நேரமும் பயிற்சி வகுப்பு நடை பெறுகிறது. இதில் தையலின் அடிப்படைக் கல்வியைப் பெறுவதுடன், நாளாந்த உடை, விளையாட்டு உடை, தலையணை உறை மற்றும் பலவகையானவை தைக்கப்படுகிறது. இவர்கள் தைக்கும் உடை இவர்களுக்கும், இவர்களது குடும்பத்தினருக்குமாகும்.

துணியில் அச்சுப் பதிக்கும் வகுப்பு விசேடமாக ஒழுங்கு செய்யப்பட்ட வகுப்பறையில் நடைபெறுகிறது.

www.tamilarangam.net



இது டென்மார்க் கேதை-7 ல் உள்ளது. இங்கு மேற்சட்டை, தொப்பி, பை, ரை போன்ற பலதரப்பட்டவை தைக்கப்படுகின்றன. இவை மட்டும் மாதாந்தம் ஒரு தடவை விற்பனைக்கு விடப்படுகின்றன.

டெனிஸ் மொழிக்கல்வியில் டெனிஸ் சமூகிய வாழ்க்கை முறையின் முக்கிய பகுதியான சுகாதாரமும் குழந்தை பராமரிப்பும், சமுதாயமும் குடும்ப வாழ்க்கை முறையும் போன்ற விடயங்களை - தெரிந்து கொள்வதோடு, தையல், அச்சுப்பதித்தல் - கல்வியும், விளைகள் சம்பந்தமான கலைகளும் - கற்பிக்கப் படுகிறது.

இத்திட்டத்தின் பயன்:....

பலதரப்பட்ட வேலைத்தளங்களைச் சென்று பார்வையிடுதல். இதன்மூலம் டெனிஸ் சமுதாய வாழ்க்கை முறையினை தெரிந்து கொள்வதுடன் அனுபவங்களையும் பெறுவர். அத்துடன் இதில் கல்வியிலும் பெண்கள் - தாங்கள் பார்வையிடும் - வேலைத் தளங்களில் - தங்களைப் பற்றியும் தங்கள் கலாச்சாரத்தைப்பற்றியும், இத்திட்டத்தின் - செயற்பாடுகளையும் - எடுத்துக்கூறுவர்.



படிக்கும் வகுப்பு அறையிலிருந்து.



உடை உற்பத்தி நிலையத்திலிருந்து.

உங்களை கலாச்சார- வீட்டிற்கும், டென்மார்க்ல் கேதை-7 ற்கும் -- வருக வருக வென - வரவேற்கிறோம்.....



www.tamilarangam.net



எதிர்காலம்:

இத்திட்டம் தனது செயற்பாடுகளை 91 மே மாதம் வரை தொடரும். இத் திட்டம் வெற்றியளித்தமையால் மேலும் விரிவாக்கி தொடர்ந்து செயற்பட முடியும் என எதிர்பார்க்கிறோம். இப் பயிற்சி முடித்தவர்கள் டெனிஷ் வேலைத்தளத்தில் நிற்பதற்கு தகுதியை பெற்றிருப்பர்....



படிக்கும் வகுப்பு அறையிலிருந்து.

டென்மார்க்ஸ் கேத-10,7
கலாச்சார இல்லம்
கொல்ஸ்ரப்ஹோ.
தொலைபேசி: 97403197.




உலக சனத்தொகையில் பாதிப்பேர் 25 வயது வரைதான் வாழுகிறார்கள்.
மூன்றில் ஒரு பகுதி பேர் 52 வயது வரை வாழ்கிறார்கள்.
நான்கில் ஒரு பகுதிப் பேருக்கு 59 வயது.
ஆறில் ஒரு பங்குப் பேருக்கு 67 வயது.
பத்தில் ஒரு பங்குப் பேருக்கு 76 வயது
பன்னிரண்டில் ஒரு பங்கு பேருக்கு 81 வயதுவரை வாழும் பாக்கியம் கிடைக்கிறது.
நூறு வயதுவரை வாழும் மனிதரைப்பற்றி யோசிக்கிறீர்களா?
பத்தாயிரம் பேர்களுக்கு ஒருவர் நூறு வயதை எட்டிப்பிடிக்கிறார்....

www.tamilarangam.net



# குறுக்கெழுத்துப் போட்டி : 12



உங்கள் கருத்து :

அலுவலகப்பாவனைக்கு:

www.tamilarangam.net

»CHANCHIVE«
Postbox: 1205
7500 Holstebro . Danmark

NR: 12, C: 13

afs. ________________________________


________________________________

________________________________

________________________________

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



www.tamilarangam.net

வெளியீடு.
தமிழ்-டெனிஸ் நட்புறவுச் சங்கம்.

"CHANCHIVE"
Tamilsk-Dansk Venskabsforening,
Postbox:1205,
7500 Holstebro.Danmark.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்